www.padippakam.com

இலங்கையில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது . Registered as a Newspaper at the G.P.O




# புதிய கண்ணோட்டம்

PUTHIYA KANNOTTAM

පුදිය කණ්ණෝට්ටම්

வெளியீடு: 15 | 01 பங்குனி 1995 | விலை: ரூபா ஐந்து


# சமஷ்டி ஆட்சிமுறை

# வடக்கு-கிழக்கு இணைப்பு

# முழுமையான அதிகாரங்கள்

## திட்டமிட்ட குடியேற்றங்களை அகற்றல்

## அரசியல் சாசனத்தின் 2வது, 76வது சரத்தை அகற்றல்

# ஈ.பி.ஆர்.எல்.எவ் - அரசை வற்புறுத்துகின்றது

**வட-கிழக்கு இனப்பிரச்சினைக்குத் தீர்வாக சமஷ்டி அரசியலமைப்பு ஒன்றை உருவாக்கும்படி ஈபிஆர் எல்எவ் வற்புறுத்துகின்றது. சமஷ்டி ஆட்சிமுறை ஒன்றே இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வாக இருக்க வேண்டும் என்பதை சுட்டிக் காட்டியுள்ளதுடன், வட-கிழக்கு இணைந்த ஓர் அரசியல் நிர்வாக அலகிற்கு சமஷ்டிக்குரித்தான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் எனவும் கோரியுள்ளது.**

மங்கள முனசிங்கா தலைமையிலான பாராளுமன்றத் தெரிவுக்குழுவானது சமஷ்டி ஆட்சிமுறையை ஏற்றுக் கொண்டுள்ளது. இதற்கு UNP, SLFP உட்பட சகல கட்சிகளும் ஆதரவு தெரிவித்தன. அத்துடன் இந்திய மாநிலங்களுக்கு உரித்தான வகையில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் எனவும் அத்தெரிவுக்குழுவில் இணக்கம் காணப்பட்டது.

வட-கிழக்கு இணைப்பு மாத்திரமே பிரச்சினைக்குரிய விடயமாக அங்கு இருந்தது. ஆனால் ஜனாதிபதி அவர்கள் கூறியது போன்று மாகாண எல்லைகளை மீள வரைவதன் மூலம், வட-கிழக்கு இணைப்புக்கும் ஓர் நிரந்தரத் தீர்வைக் காணமுடியும் எனவும் ஈபிஆர்எல்எவ் சுட்டிக்காட்டியுள்ளது.

சமஷ்டி ஆட்சியை அமைப்பதற்கு முதல் படியாக இலங்கை ஓர் ஒற்றையாட்சி நாடு என்ற அரசியல் சாசனத்தின் 2வது பிரிவையும் அதிகாரப் பரவலாக்கலுக்குப் பதிலாக அதிகாரப் பகிர்வை அர்த்தமுள்ளதாக்கத் தக்க வகையில் அரசியல் சாசனத்தின் 76வது பிரிவையும் நீக்க வேண்டும் எனவும் ஈபிஆர்எல் எவ் கோரியுள்ளது.

அதிகாரங்களைப்பொறுத்தவரையில்பாதுகாப்பு, வெளிவிவகாரம், நாணயம் போன்ற பொதுவிடயங்கள் தவிர ஏனைய முழு அதிகாரங்களும், சமஷ்டி ஆட்சிக்கு வழங்க வேண்டும் எனவும், வழங்கப்படும் அதிகாரங்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மூலமோ, வேறு வகையிலோ, மீளப்பெற முடியாத வகையில், பாதுகாப்பு ஷரத்துக்கள் அரசியல் சாசனத்தில் சேர்க்கப்பட வேண்டும் எனவும் ஈபிஆர்எல்எவ் பரிந்துரை செய்துள்ளது.

மேலும் தமிழ் மக்களின் விகிதாசாரத்தை குறைப்பதை நோக்கமாகக் கொண்டு அரசாங்கத்தால் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் அகற்றப்பட வேண்டும் எனவும் ஈபிஆர்எல்எவ் வலியுறுத்தியுள்ளது.

பொதுநலவாய நாடுகளின் தென்கிழக்காசியப் பொறுப்பாளர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். கொழும்பில் எமது அலுவலகத்தில் தோழர் கேதீஸ்வரன் (ஈபிஆர்எல்எப்இன் பிரதம பேச்சாளர்) உடனும், மட்டக்களப்பில் தோழர் துரைரத்தினம் (அரசியல்பீட உறுப்பினர்) தோழர் நேசராசா (மத்திய கமிட்டி உறுப்பினர்) ஆகியோருடனும் அரசு-புலிகளுக்கிடையேயான போர் தவிர்ப்பு பற்றியும், இனப்பிரச்சினைக்கான தீர்வும் அதற்கான வழிமுறைகளும் பற்றியும் கலந்துரையாடினர்.

சிறிலங்கா அரசு தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய முழுமையான அரசியல் தீர்வையும், அதற்கான சட்டவாக்கத்தையும் முதலில் வைக்க வேண்டும் என்றும், உடனடியாக எல்லைப் பிரதேசத்தில் திட்டமிட்டு நடாத்தப்படும் சிங்கள குடியேற்றத்தை நிறுத்துதல் வேண்டும் என்றும், ஏற்கனவே குடியேற்றிய சிங்களக் குடியேற்றத் திட்டத்திற்கு கால எல்லையை வரையறுத்து அதன்பின் குடியேறியவர்களை அப்பிரதேசத்திலிருந்து வெளியேற்ற வேண்டும் என்றும், வட-கிழக்கு இணைப்பு நிரந்தரமாக்கப்படல் வேண்டும் என்றும், அதோடு சிங்கள மக்கள் செறிவாக வாழும் பகுதிகள் பற்றி பேசித் தீர்வுகாணப்படல் வேண்டும் என்று ஈபிஆர்எல்எவ்வினால் தெரிவிக்கப்பட்டது.

அரசு புலிகள் செய்துகொண்டுள்ள போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தைப் பயன்படுத்தி தங்களைத் தாங்களே பலப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுதல் என்பது எதிர்காலத்தில் மீண்டும் இந்த தேசத்து மக்களுக்கு பெரும் கஷ்டத்தை ஏற்படுத்தும். அதனால் இருதரப்பாரும் திறந்த மனதுடன் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அரசியல் தீர்வுக்கு வரவேண்டும் என்பதையே அனைத்து மக்களும் விரும்புகின்றார்கள்.

புலிகளின் ஆதிக்கத்தின்கீழ் ஓர் இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்தி அதனூடு புனருத்தாரன வேலைகளை மேற்கொள்ள வேண்டும் என்று புலிகள் தரப்பில் கருத்து நிலவுகின்றதாக அறிகின்றோம். அரசியல் தீர்வும், இடைக்கால நிர்வாக சபையும் சமகாலத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய விடயமாகும். அதைத்தவிர்த்து தீர்வுக்கு முன்பே இடைக்கால நிர்வாக சபையை அமைப்பது என்பது ஜனநாயகத்திற்கும், சமாதானத்திற்கும் பெரும் குந்தகம் விளைவிக்கும் என்று பொதுநலவாய நாடுகளின் தென்கிழக்காசியப் பொறுப்பாளருக்குத் தெளிவுபடுத்தப்பட்டது.

## வவுனியாவில் சமாதானப் பேரணி
## "யுத்தம் எமக்கு வேண்டாம்"



**17.02.95** இந்த நாட்டின் வரலாற்றில் ஒரு முக்கியமான நாள். சுமார் 200க்கு மேற்பட்ட சிங்கள மக்கள் சமாதான ரயிலில் வவுனியா வந்திறங்கினார்கள். சுட்டெரிக்கும் வெய்யிலில் வவுனியா வீதிகளில் "அப்பிட்ட எப்பா யுத்தய" "அப்பிட்ட ஓன சாமய"..... "எமக்கு யுத்தம் வேண்டாம் எமக்கு சமாதானம் வேண்டும்" என்ற கோஷங்கள் வானைப் பிளந்தன. நூற்றுக்கணக்கான வவுனியா மக்கள் வீதியின் இருமருங்கும் திரண்டு நின்று சமாதானப் பேரணியினரை வரவேற்றனர்.

மக்கள் பெருமளவில் பங்குபற்றவில்லை என்பது உண்மையேயாயினும் இந்தப் பேரணி தமிழ் மக்களின் மனதில் சில அதிர்வுகளை ஏற்படுத்தியது. "எமக்குச் சமாதானம் வேண்டும்" "சமாதானம் ஆம் ஜனநாயகத்துடன்" ஆகிய பதாகைகள் தாங்கி வரப்பட்டன. வவுனியா மக்கள் தண்ணீரும் குளிர்பானமும் வழங்கி பேரணியினருக்கு தாக சாந்தி செய்தார்கள்.

17ந்திகதி முழுவதும் சமாதான் ஆரவாரத்தில் வவுனியா திமிலோகப்பட்டது. வவுனியா நகரசபையில் யுத்தத்தின் கொடூரங்களைச் சித்தரிக்கும் புகைப்படக் கண்காட்சி ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. இக் கண்காட்சியில் யுத்தத்தில் சீரழிந்த கட்டிடங்கள், சிதறுண்ட மனித உடல்கள்,

5

படிப்பகம்

www.padippakam.com



# கண்ணோட்டம்

ஜனநாயகம் என்பது 5 வருடத்துக்கொரு தடவையோ 6 வருடத்துக்கொருதடவையோ தேர்தல் நடாத்துவது என்பதுடன் முடிந்து விடுவதல்ல. அடிப்படையில் ஜனநாயகம் என்பது ஒரு மனிதன் பேச, எழுத, தனது கருத்தை பிரச்சாரப்படுத்த இருக்கும் சுதந்திரமாகும். மொத்தத்தில் ஒரு மனிதனின் முழுமையான சுதந்திரத்தையே இது குறிக்கின்றது.

இன்று வட-கிழக்கு பிரச்சினைக்கு சமாதானத் தீர்வொன்றைக் காண்பதற்காக, அரசும் புலிகளும் பேச்சுவார்த்தை நடாத்த ஆரம்பித்திருக்கும் அதேசமயம் சில சக்திகள் பேச்சுவார்த்தை என்பது புலிகளுடன் மாத்திரமே நடாத்தப்பட வேண்டும், ஏனைய கட்சிகளுடன் இயக்கங்களுடன் தேவையில்லை என்ற சாரப்படவே பேசி வருகின்றன. இவர்களுக்கு ஜனநாயகம் என்பதெல்லாம் புலிகளுக்கு பிற்பாட்டு பாடுவதே தவிர வேறொன்றுமில்லை.

ஒருபக்கம் ஜனநாயகம் என்று கூப்பாடு போடும் கூட்டணி எம்பி ஜோசப் தொடக்கம், இன்னும் பெயர் தெரியாத புதுப்புது தலைவர்களும் கூட புலிகளுடனேயே பேச வேண்டும் என்றுதான் கூக்குரலிடுகின்றனர். இவர்களுடைய கண்மூடித்தனமான இக்கூற்றானது வட-கிழக்கில் விரும்பியோ விரும்பாமலோ ஒரு கட்சி ஆட்சி முறை ஒன்றை உருவாக்கவே வழிவகுக்கும் என்பதை உணராதவர்களாகவே இவர்கள் உள்ளார்கள்.

புலிகள் ஆயுதம் வைத்திருப்பதால்தான் அவர்களுடன் பேச வேண்டுமெனில், ஏனைய இயக்கங்கள் ஆயுதங்களை ஒப்படைத்தது தவறானதா என்பதை இவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். ஏனைய இயக்கங்கள் ஜனநாயகப் பாதைக்கு வந்தது தவறானதா என்பதை அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். ஆயுத ரீதியாகப் பலமானதொரு இயக்கம், ஏனைய கட்சிகளை, இயக்கங்களை அழிப்பது சரியானதா என்பதை இவர்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

புலிகளைப் பொறுத்தவரையில் தம்மைத்தவிர வேறு எந்த ஓர் அரசியல் கட்சியோ, இல்லையேல் இயக்கங்களோ அல்லது அரசு சாரா அமைப்புக்களோ அவர்களது உத்தரவு இல்லாமல் இயங்க முடியாது. வட-கிழக்கைப் பொறுத்தவரை இன்று இதுதான் நிலை. புலிகளைத் தவிர வேறெவரும் தமது கருத்துக்களைக் கூறமுடியாது, எழுதமுடியாது, பேசமுடியாது, புலிகளுடன் மாத்திரம் பேச வேண்டுமென்பவர்கள் புலிகளின் மேற்கண்ட கொள்கைகளை ஆதரிப்பவர்கள் என்றே பொருள்படும்.

போர் தவிர்ப்பு ஒப்பந்த காலத்தில் கூட புலிகள் துப்பாக்கிகள் இன்றி எங்கும் போகமுடியும். ஆனால் புலிகளுக்கெதிரான கருத்துக் கொண்டோர் அல்லது ஏனைய இயக்கங்கள் புலிகளது கட்டுப்பாட்டிற்குள் உள்ள பிரதேசத்துக்கு போகமுடியுமா என்றால், இல்லை என்பதே பதிலாக உள்ளது. இப்படியான ஓர் சூழ்நிலையை தொடர்ந்து வைத்திருக்க விரும்புபவர்கள்தான் புலிகளுடன் மாத்திரம் பேசினால் போதும் என்று கூக்குரலிடுகின்றனர்.

புலிகள், ஒரு கட்சியோ அல்லது தாம் மாத்திரம்தான் வட-கிழக்கில் இருக்க வேண்டும் என்பதில் மிகவும் தெளிவாக உள்ளார்கள். இதற்காகவே தமக்கெதிரான கருத்துள்ள சகலரையும் அழித்து வருகின்றார்கள். ஆரம்பத்தில் ஏனைய இயக்கங்கள் அழிக்கப்பட்டன. அதன் பின் முக்கிய தலைவர்கள் அழிக்கப்பட்டனர். அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் போன்றோரும் கம்யூனிஸ்ட் கட்சி நவசமசமாஜக்கட்சி போன்றவற்றின் வட மாகாணத் தலைவர்களும் அழிக்கப்பட்டனர். பத்மநாபா, சிறீசபாரத்தினம் போன்றவர்களும் அழிக்கப்பட்டனர். இது மாத்திரமல்ல சகல இயக்கங்களின், கட்சிகளின் தவறுகளை சுட்டிக்காட்டிய ரஜனி திரணகம போன்ற புத்திஜீவிகளும், இன்னும் பல மாணவர் தலைவர்களும் அழிக்கப்பட்டனர். இக்கொலைகள் எல்லாம் அவர்கள் தம்மை நிலைநிறுத்திக் கொள்வதற்காகவே செய்தனர். இதனால்தான் இன்று ஜனநாயகத்துடன் கூடிய சமாதானம் வேண்டுமென மக்கள் கோஷமிடத் தொடங்கியுள்ளனர்.

எண்ணிக்கைகள் வேறுப்பட்டிருந்தாலும், பல்வேறுபட்ட இயக்கங்களிலும் பல ஆயிரக்கணக்கான தியாகிகள் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் தமது உயிர்களைத் தியாகம் செய்துள்ளார்கள். எனவே புலிகளின் உயிர்கள் மாத்திரம் பெறுமதியானவை ஏனைய போராளிகளின் உயிர்கள் யாவும் கிள்ளுக்கீரைக்குச் சமானமானது என யாராவது மதிப்பீடு செய்தால், அது தவறானது அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

தென்னிலங்கையில் பத்திரிகை சுதந்திரம், ஜனநாயகம் என அரசும், பொதுமக்களும் அவற்றிற்கே முன்னுரிமை கொடுக்கின்றனர். ஆனால் தென்னிலங்கையில் சுதந்திரம், ஜனநாயகத்தை வரவேற்றுப் பேசும் கொழும்பு தமிழ் புத்திஜீவிகளும் படித்த வல்லுனர்களும் கூட வடக்கு கிழக்கென்றால் அதனை புலிகளிடம் விட்டுவிடலாம் என்றே கருதுகின்றார்கள். ஏனெனில் இவர்களில் பெரும்பாலானோர் பாதிக்கப்படாதோருமாவார். பல கலவரங்களில் சிங்களக் காடையர்களால் தாக்குதலுக்குள்ளான இவர்கள் புலிகள் சிங்கள மக்களைத் தாக்கும்போது உள்ளூர சந்தோஷப்பட்டுக் கொள்கின்றார்கள். புலிகள் இருப்பதால்தான் நாம் கொழும்பில் தலை நிமிர்ந்து நடக்க முடிகின்றது என்று வெளிப்படையாகவே பேசிக்கொள்கின்றார்கள்.

போராட்டம் எவ்வளவு தூரம் சீரழிந்துவிட்டது, வட-கிழக்கில் மக்கள் எவ்வளவு தூரம் கஷ்டப்படுகின்றார்கள், தமிழ் மக்களின் ஒரு தலைமுறை படிப்பறிவற்ற கீழ்நிலைக்கு எவ்வாறு தள்ளப்பட்டுள்ளது என்பதை' இவர்கள் சிந்திப்பது கிடையாது. எனவே கண்மூடித்தனமாக ஆதரவு என்பதனை விடுத்து, நியாயமான ஓர் தீர்வின் அவசியத்தை கொழும்பில் இருப்போர் சிந்திக்க வேண்டும்.

ஜனநாயகமற்ற ஓர் சமூகம் எவ்வளவு தூரம் அடக்குமுறைக்குள்ளாகும் என்பதற்கு உலகமெல்லாம் பலநூறு சரித்திரங்கள் உண்டு. எனவே ஜனநாயகத்துடன் கூடிய சமாதானத்தின் அவசியத்தை சகல மக்களும் புரிந்துகொள்ள வேண்டும். வட-கிழக்கில் இருக்கும் மக்கள் சாப்பிடுவதற்கு தவிர தமது வாயைத் திறக்கக் கூடாது, திறக்க முடியாது என்ற சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள். குறைந்தபட்சம் வட-கிழக்கிற்கு வெளியில் வாழும் மக்களாவது அவர்களது நியாயபூர்வமான கோரிக்கைகள் விருப்பங்களுக்காக குரல் கொடுக்கக் கூடாதா?


## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

உங்களிடமிருந்து அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் புதியகண்ணோட்டம் வரவேற்கிறது. அனுப்பவேண்டிய முகவரி:

**புதியகண்ணோட்டம்,**
**த.பெ.இல: 442,**
**கொழும்பு.**

புதியகண்ணோட்டம் தொடர்பான அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

29A, வாவிக்கரை வீதி-I,
மட்டக்களப்பு.
☎ 065-2398

54, மாணிக்கவாசகர் வீதி,
திருகோணமலை.

88/2, வாடிவீட்டு வீதி,
கல்முனை.

22, வெளிவட்ட வீதி,
வவுனியா.

மன்னார்
☎ 023-2370

வெளிநாட்டு முகவரிகள்:

Post Bag: 1041,
Madras-17,
India.

B.M.Box: 1738,
London-WCIX-3NN,
U.K.

P.Fach: 100206,
44002 Dortmund,
Germany.

Box No: 95,
95144, GargesLes,
Gonnesse Cedex,
France.

P.Box: 6800,
Agincourt,
Ont-MIS3C6,
Canada.

P.Fach: 506,
Bern-17,
Switzerland.





தொலைக்காட்சியில் காட்டப்படும் காட்சிகளில் பெண்களின் சித்தரிப்பு, பெண் சுயசார்பு மற்றும் சுய சிந்தனையற்றவளாக, தனித்தன்மை இல்லாதவளாக சித்தரிக்கப் படுவதைப் பற்றிப் பேசியும் எழுதியும் மாதர் சங்கத்தினர் அலுத்தே போய்விட்டார்கள். குற்றச்சாட்டு பழையதானால் என்ன, சில குற்றங்கள் நம் கண்ணுக்கு பழகுவதே இல்லையே! திரைப்படங்கள்தான் தெரிந்த விஷயம். TV நிறுவனத்தினர் தயாரிக்கும் நாடகங்கள்? அவற்றைப் பார்த்தால் மாதராய் பிறக்க நாங்கள் மகாபாவம்தான் செய்திருக்க வேண்டுமென்று தோன்றுகின்றது.


பிழியப்பிழிய அழும் பெண்கள், 'முணு'க்கென்றால் கொடுமைக்காரக் கணவனின் காலில் விழும் 'தொங்க தொங்க' தாலி கட்டிய மனைவிகள், மகளின் முடியை பிடித்திழுக்கும் தந்தைகள், நொடிக்கு ஒரு 'டீ' போட்டழைக்கும் 'வீர' கணவன்மார்கள்– இப்படி ஆண் பெண் இருவரையும் அவமானப்படுத்தும் ஆணாதிக்கப் பார்வை. தவறிப்போய் ஒரு பெண்ணை தைரியசாலியாக காண்பித்தால் அவள் திருமண பந்தத்தை மதிக்காதவளாக இருப்பாள். அவளுக்கும் கடைசி காட்சியில் காலில் விழும் சீன் உண்டு!

மாதர் சங்கத்தினர் வம்பு பேசுபவர்களாக, மற்ற குடும்பங்களை பிளவுபடுத்துபவர்களாக, தங்கள் கணவன்மாரை அவமதிப்பவர்களாக சித்தரிக்கப்படுகின்றனர். பெண்ணிய நோக்குடன் பல புனைக்கதைகளை எழுதியுள்ள பிரபல பெண் எழுத்தாளர் ஒருவர் கூறக்கேட்டது; கடும் சோதனைக்கு ஆளான ஒரு பெண் தீரத்துடன் முடிவெடுப்பதாக அவர் எழுதிய சிறுகதையை TV நாடகவடிவாக்கியபோது கதாநாயகி தற்கொலை செய்து கொள்ளுவதாக கதையை மாற்றிவிட்டார்கள் எத்தனை சாடிஸம்.

விளம்பரங்களைப் பற்றிக் கூற ஒரு புத்தகம் போதாது. ஆணாதிக்க சமுதாயத்தில் ஆணின் ஒப்புதல் முக்கியமாகிப்போனதால் பெண்களிடையே தோன்றும் போட்டி உணர்ச்சியை புரிந்து கொள்ளாது பெண்ணே பெண்ணுக்கு எதிரி என்று ஆனந்தமாக காண்பிக்கும் விளம்பரங்கள்–வேலை வாங்கும் மாமியார், தன் கழிப்பறை கழுவும் திறனுக்கு மாமியார் ஒப்புதல்பெற ஏங்கும் மருமகள், இத்தியாதி. தனக்கு வேலை கிடைக்காததற்கு காரணம், தன்மனைவி தன் சட்டையை சரியாக தோய்க்காததுதான் என்று எரிந்து விழுவதைவிட அவனே அதைத் தோய்த்துக் கொண்டிருந்தால் அவனுக்கு வேலை கிடைத்திருக்கலாம் – அவன் சுயசார்புக்காக! மனைவி தோய்த்த படுக்கை விரிப்பு வெளுப்பாக இல்லாததனால் சகோதரியின் திருமணம் தடைபட்டது என்று கொந்தளிக்கும் கணவன், மனைவி சகோதரி இருவரையுமே அவமதிக்கிறான். 'ஷேவிங் லோஷன்' விளம்பரத்தில் எதற்கு பெண்? வாகனத்திற்கும் பெண்ணிற்கும் பொருந்தக்கூடிய இரட்டைஅர்த்த நாகரீகமற்ற வர்ணனை–அவ்வாகனத்தின் விற்பனையை கூட்டியிருக்காது–எங்கள் சாபம் பலித்திருந்தால்!

TV நிகழ்ச்சிகளை ஒரு வாரம் பார்த்து விட்டு ஒரு அமெரிக்கன் கேட்டார். 'உங்கள் நாட்டில் பெண்கள் எப்பொழுதும் துணி தோய்ப்பீர்கள்?' ஒரு அதிசயமென்னவென்றால் விளம்பரங்களில் வீட்டு வேலைகள் செய்யும், குழந்தை பராமரிக்கும் பெண்கள் கஞ்சி கலையாத புடவையும் புன்னகையுமாக எல்லா வேலையும் செய்கிறார்கள். இதை வீட்டு வேலை செய்தறியாத ஆண்கள் பார்த்தால் 'என் மனைவி வீட்ல சும்மாதான் இருக்கா' என்றவாக்கியம் இன்னும்பலர் வாயில் வரும். தொலைக்காட்சி தயாரிக்கும் நிகழ்ச்சிகளையும், அதில் காட்டப்படும் திரைப்படம் மற்றும் விளம்பரங்களையும் பரிசீலிக்கும் தணிக்கை குழுவில் மாதர் சங்கத்தினரும் உறுப்பினராக வேண்டும்.

**– வத்ஸலா (நன்றி: கணையாழி)**



பெண் ஆணின் ஒருபகுதிதான்; என்றாலும் இவள் அவனுக்குள் அடக்கம்.

இவள் தாய்தான். மனித சமுதாயத்தின் முதல்வி என்றாலும் இவள் தந்தைக்குள் அடக்கம்.

ஒரு குடும்பத்தின் விளக்கு இவள். என்றாலும் இவள் இருப்பிடம் இருட்டுதான்.

மனையையும் கணவனையும் பேணும் இவள் இருக்கும் குடும்பத்தில், இல்லாதது ஒன்றுமில்லை. ஆனால் இந்த இவளுக்கு இவளே சொந்தமானவள் இல்லை. தன் கணவன் புகழ் ஓங்க, பெருமை விளங்க, இவள் மறைமுகமாக ஓயாது உழைக்கிறாள். இவள் புகழும் பெருமையும் அவனுக்கே உரித்தானது.

இது வளர்ப்பு பிராணி தத்துவம்தான்.
ஆனால், ஆறறிவு பெற்றிருக்கும் இவள், இது அநியாயம் என்று கருதி விடக்கூடாதல்லவா?

எனவே, இந்தக் கட்டுப்பாட்டுத் தத்துவங்களுக்கு உட்பொருள்–பதிவிருத்ய கற்பரசி மகிமைகள் கொண்டு ஏற்றி வைக்கப்படும் பரிணாமம் இசைந்தது. "அம்மா! நீயன்றோ தெய்வத்துக்கும் மேலானவள்! உன்னால்தானன்றோ மழை பொழிகிறது! வையம் தழைக்கிறது! நீ சொன்னால் கிழக்கே உதிக்கும் சூரியனும் கட்டுப்படுவானே!" என்று போற்றப்பட்ட பூச்சொற்களில் இவள் அகம் குழைந்து, எத்துணைத் தியாகத்துக்கும் தன்னை உட்படுத்திக் கொள்ளலானாள்....

பெண்ணின் வாழ்க்கையே, ஒருவனுக்கோ, பலருக்கோ பயனடையக் கருவியாக இருப்பதில் தான் ஒளி பெறுகிறது என்ற தத்துவம் தோற்றுவிக்கப்பட்ட நாளிலேயே, பெண் தன் வலிமையையும் நெஞ்சுறுதியையும் இழந்தாள். ஆண் அவளுக்கு 'அபலை' எனற பெயரைச் சூட்டி, கொஞ்ச நஞ்சம்–மிச்சமீதி இருந்த உறுதியையும் அழித்தான். அதுமட்டுமன்று. அபலையாக இருப்பதே உன் அழகல்லவா? அழகுக்கு இலக்கணம், அச்சம், பேதைமை, மடமை, ஆகியவை அன்றோ? 'விரோதிகள் எவர்களேனும் இருக்கிறார்களோ.....' என்று கானகத்து மரங்களூடே எட்டிப்பார்த்துக்கொண்டு வரும் மான்களின் விழிகள் எவ்வளவு அழகானவை? அதைச் சிறப்பாக்கி இவளுக்கு 'மான் விழியாள்' என்று பட்டம் சூட்டப்பட்டது. மானைப்போன்ற அழகிய கண்கள் என்று இவள் மகிழ்ந்து போனாள். அந்த அழகு, மருண்ட அச்சம் மிகுந்த ஒரு திகிலில் இடம் கொண்டிருக்கிறது. என்பதையும் கூட இவள் உணரவில்லை.

மருட்சி–பயம்... என் விழிகளில் பயம் இருப்பதா அழகு? நான் எதற்கு அஞ்ச வேண்டும்? யாருக்கு அஞ்ச வேண்டும்–என்று இவள் நினைக்கவேயில்லை.

ஏனெனில்,இவளுடைய உடற்கூறியலே இவளுக்கு அஞ்சுவதற்கு ஒரு காரணியாகக் கற்பிக்கப்பட்டிருக்கிறது. எவரும் வலிய வந்து, 'உன்னை' பலாத்காரம் செய்துவிட முடியும். பிறகு நீ ஒன்றுக்கும் உதவாத குப்பையாவாய்!' என்ற ஓர் அச்சத்தை, பெண் பூப்படைந்த நாளிலிருந்து பெற்றோரும் மற்றோரும், உற்றவரும், ஊராரும் அவளுக்கு ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த அச்சமே, அவளுடைய பொருளாதார சுயச்சார்பை உறிஞ்சுகிறது. அவளுடைய கல்வியைப் பயனில்லாததாக ஆக்குகிறது; அவளுடைய திறமைகளைக் குடத்துக்குள் வைத்து மூடிவிடுகிறது.

**– ராஜம் கிருஷ்ணன்**

படிப்பகம்

www.padippakam.com



# "நல்லவர்களது மௌனத்திற்காகவே நாம் வருந்த வேண்டியிருக்கிறது"

யாழ் பல்கலைக்கழகத்தில் 1986ம் ஆண்டு நடுப்பகுதியில் நடந்த ஒரு கூட்டத்தில் தேசிய விடுதலைக்காக போராடும் இயக்கங்கள், அதனை அங்கீகரிக்கும் வெகுஜன அமைப்புக்கள் இலக்கிய கர்த்தாக்கள், அடங்கிய ஒரு கூட்டுக் குழுவை நிறுவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம் மக்களுக்கும் விடுதலை இயக்கங்களுக்கும் இடையே நெருக்கத்தை ஏற்படுத்த முடியும் எனவும், எந்த ஒரு பிரச்சினையிலும் இந்த கூட்டு குழுவில் எடுக்கப்படுகின்ற முடிவுகளை அமுல்படுத்துவதன் மூலம் போராட்டத்தை நெறிப்படுத்த முடியும் எனவும் கருதி அந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் விடுதலைப்புலிகள் இந்த யோசனைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. விடுதலைக்காக போராடுவது இயக்கங்கள். வேறெவரும் இயக்க நடவடிக்கைகளில் தலையிடுவதை அனுமதிக்க முடியாதென மறுத்துவிட்டார்கள். ஆனால் ஈபிஆர்எல்ப் இதனை ஏற்றுக்கொண்டு புலிகளின் விரோதத்தை மேலும் வளர்த்துக் கொண்டது என்பது நண்பர்கள் கூறும் பழைய கதை.

"புலிகள் அன்று சொன்ன அதே கருத்தைத்தான் இன்று வேறு சிலர் சொல்கிறார்கள். அதனைச் சொல்பவர்கள் புதியவர்களே தவிர விஷயம் ஒன்றும் புதிதில்லை. ஆனால் அவர்கள் புலிகளைவிடவும் ஒருபடி மேலே போய் புலிகள்தான் போராடுகிறார்கள், புலிகள் தவிர அனைவரும் மௌனமாயிருப்பதுதான் இன்று உயர்ந்த அரசியல் கடமை என்ற ஒரு புதிய சித்தாந்தத்தையே முன்வைத்துள்ளார்கள்."

புலிகள் அன்றுசொன்ன அதே கருத்தைத்தான் இன்று வேறு சிலர் சொல்கிறார்கள். அதனைச் சொல்பவர்கள் புதியவர்களே தவிர விஷயம் ஒன்றும் புதிதில்லை. ஆனால் அவர்கள் புலிகளைவிடவும்ஒருபடி மேலேபோய் புலிகள்தான் போராடுகிறார்கள், புலிகள் தவிர அனைவரும்மௌனமாயிருப்பதுதான் இன்று உயர்ந்த அரசியல் கடமை என்ற ஒரு புதிய சித்தாந்தத்தையே முன்வைத்துள்ளார்கள்.

## பார்வையாளர்கள் சும்மா இருந்துவிடலாம்தான்

விடுதலைப் போராட்டத்தை தமது பகுதி நேரப் பணியாகக் கொண்டவர்களும், கருத்துச் சொல்வதுடன் எதிலும் ஒட்டாமல் தள்ளியே நின்றுகொண்டவர்களும் சும்மா இருந்துவிடுவதில் ஒன்றும் சிரமம் இருக்காது. ஆனால் விடுதலைப் போராட்டத்திற்காகவே தமது வாழ்நாளைச் செலவிட்டவர்கள், உடல் பொருளை அர்ப்பணித்தவர்கள் மௌனம் சாதிக்க இயலாது.

விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள், அவர்களுக்கு ஆதரவளிக்க முன்வந்தவர்கள் என மக்களில் ஒருபகுதியினர் இந்த சமுதாயத்திலிருந்தே பெயர்க்கப்பட்டுள்ளார்கள். ஒவ்வொரு தனிமனிதனுக்குமுள்ள அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கிறது. இலங்கை அரசினால் இழைக்கப்பட்ட அநீதிகள் அடக்குமுறைகளைக் காட்டிலும் பாரிய அடக்குமுறைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

எந்த ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்திலும்மக்களுக்குத்தரப்பட்ட உரிமைகள்இங்கு தரப்படவில்லை. மனித வாழ்விற்கே சவால் விடப்படும்போது, வாழ்க்கைப் பிரச்சினை என்றாகும்போது எப்படி மௌனமாயிருக்க முடியும்? ஏன் மௌனமாயிருக்க வேண்டும்?

விடுதலைப் போராட்டத்தில் எம்மை யாரும் வற்புறுத்திப் பங்குபற்ற வைக்கவில்லை. நாமும் எமது சமூகமும் எமது இனமும் முகம் கொடுத்த பிரச்சினைகளே எம்மை போராட்டத்திற்குள் தள்ளியது. அவ்வாறே இன்றைக்கும் இந்த சமூகம் முகம்கொடுக்கும் பிரச்சினைகளைக் கண்டுகொண்டு மௌனமாயிருக்க முடியாது. அன்றைக்கு மௌனமாய் இருந்தவர்கள் இனியும் மௌனமாயிருப்பது பற்றி ஆட்சேபணை இல்லை.

## அநீதி கண்டு அமைதி வேண்டாம்

கொடியவர்களதுஈனச்செயல்களுக்காக மட்டுமல்ல, அதற்கு மேலாக நல்லவர்களது மௌனத்திற்காகவே நாம் வருந்தவேண்டியிருக்கிறது என மாட்டின் லூதர் சொன்னதாய் சொல்லி, அநீதியைக் கண்டு அமைதியாய் இருக்க வேண்டாம் என்று கருத்து சொன்னவர்களே இப்போ மௌனமாய் இருங்கள் என்றும் சுலபமாய் சொல்லிவிடலாம். இதனை வலியுறுத்தி சொல்லவும் அவர்களுக்கு ஒரு மேற்கோள் கிடைக்காமலா போய்விடும்.

கருத்துச் சொல்பவர்களுக்கு அது ஒன்றும் கஷ்டம் இல்லை. ஆனால் மாட்டின் லூதர் சொன்னதாய் இவர்கள் சொன்னதை கேட்டு, சொல்லைச் செயலாக்க எண்ணி புலியின் முதுகிலே சவாரி செய்யப் புறப்பட்டவர்களை "இறங்கு.....கொஞ்சம் சும்மாயிரு" என்றால் அது அழிந்துபோ என்று சொல்வதற்கு ஒப்பானதே.

இனி கூட்டணிப் பிரமுகர்கள் தற்போது தெரிவித்து வருகின்ற ஒரு கருத்தும் கவனத்திற்குரியது அரசியல் அமைப்பு திருத்த யோசனைகளை சமர்ப்பிப்பதற்கு முன் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் கட்சிகள், தொண்டமான் தலைமையில் கூடி, கருத்துப் பரிமாறல்களை மேற்கொண்டு தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தி இணைந்து செயற்படுவதற்கு கூட்டணி மறுப்பு தெரிவித்திருக்கிறது என்பது தெரிந்ததே. இந்த கூட்டமைப்பில் பங்குகொள்வதும் பங்கு கொள்ளாமல் விடுவதும் அவர்களுக்குள்ள உரிமை.

இந்த கூட்டமைப்பில் பங்குகொண்டுள்ள ஒவ்வொருஅமைப்பும் மொத்த தமிழ்மக்களின் நலன்களை முதன்மைப்படுத்தி தொடர்ந்து இதயசுத்தியுடன் இணைந்து செயற்படுவார்களா? என்ற ஐயப்பாடு கொள்வதிலும் தவறில்லை.

ஆனால் இந்த கூட்டமைப்பில் அங்கம் வகிப்பதற்கு மறுத்து கூட்டணி தெரிவித்துள்ள காரணம் விசனப்பட வைக்கிறது. புலிகளுக்கும் அரசுக்கும் இடையே நடைபெறும் சமாதான முயற்சிகளை இது பாதிக்குமாம்! ஏதோ இவர்களின் மற்றெல்லா நடவடிக்கைகளையும் புலிகள் வரவேற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்ற நினைப்பில் பேசுகிறார்கள்.

இதர தமிழ் கட்சிகள் இயக்கங்கள் அரசியலில் ஈடுபடுவதே தமக்கு இடையூறு என்பது புலிகளின் கருத்து. எனவேதான் வேறெந்த அமைப்பின் அரசியல் செயற்பாட்டையும் அவர்கள் அனுமதிப்பதில்லை. கூட்டணி செயலதிபர் அமிர்தலிங்கமும் அதே காரணத்தினால்தான் படுகொலை செய்யப்பட்டார் என்பதற்காக புலிகளின் விருப்பத்திற்குத் தடையாய் நில்லாமல் கூட்டணி அரசியலைவிட்டே ஒதுங்கி கொண்டதா என்ன?

தமது பாராளுமன்ற பதவிகளைப் பாவித்து புலிகளுக்கு நன்மை செய்வதாகக் காட்டி, தமது பதவிகளை காப்பாற்றிக் கொள்ள நினைக்கிறார்களே தவிர தற்போதுள்ள பிரச்சினைகளுக்கு நிரந்தரத்தீர்வு காண்பது அவர்கள் நோக்கம் இல்லை.

முன்பு எம்பி பதவிகளை இராஜினாமாச் செய்ய வேண்டுமென் இளைஞர்கள் நெருக்கடி கொடுத்ததையும், கடந்த பாராளுமன்ற தேர்தலில் வெற்றிபெற்ற ஈரோஸ் எம்பிக்கள் புலிகளின் கட்டளையை மீறமுடியாமல் எம்.பி பதவிகளை துறந்ததையும் கூட்டணி தலைவர்கள் எப்படி மறந்திருக்க முடியும்.

"விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள், அவர்களுக்கு ஆதரவளிக்க முன்வந்தவர்கள் என மக்களில் ஒருபகுதியினர் இந்த சமுதாயத்திலிருந்தே பெயர்க்கப்பட்டுள்ளார்கள். ஒவ்வொரு தனிமனிதனுக்குமுள்ள அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கிறது. இலங்கை அரசினால் இழைக்கப்பட்ட அநீதிகள் அடக்குமுறைகளைக் காட்டிலும் பாரிய அடக்குமுறைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது."

பாராளுமன்றப் பதவியையும் அந்தஸ்தையும் மட்டும் அவர்கள் இழக்கத் தயாரில்லை. அதனை தக்கவைத்துக் கொள்வதற்காக அவர்கள் நிலைமைக்கேற்றபடி தமது அரசியல் உபாயங்களை வகுத்துக் கொள்வார்கள். அதனால்தான் இப்போது புலிகளின் அபிமானத்தை பெறத் தவிக்கிறார்கள்.

## ஜனநாயகமில்லாத சமாதானம் போதுமா?

கூட்டணித் தலைவர்களின் சொல்லும் செயலும் தமது நலன்களை காத்துக் கொள்வதற்காகவே அன்றி பரந்துபட்ட மக்களின் நலனைக் காப்பதற்காக இல்லை. தமிழ் மக்களின் பல்வேறு தரப்பினரும் இன்று முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற பிரச்சினைகள் என்ன? அந்தப் பிரச்சினைகளுக்கு நியாயமான, ஜனநாயகபூர்வமான தீர்வுகாண்பதின் மூலம்தான் நிரந்தரமான சமாதானம் அமைதி தோன்றும் என்பதில் இவர்களுக்கு அக்கறை இருப்பதாயும் தெரியவில்லை.

"ஜனநாயகம் என்பதும், முற்போக்கு சிந்தனை என்பதும் எடுத்த எடுப்பில் ஒரு சமுதாயத்தில் நிலைபெற முடியாது. பயமுறுத்தியும் அதனை நீண்டநாள் பின்பற்ற வைக்க முடியாது. அன்றாட வாழ்வின் பிரச்சினைகள் தேவைகள் நடவடிக்கைகள் மூலம்தான் அதன் உன்னதம் மக்களால் உணர்ந்து கொள்ளப்பட வேண்டும்."

"புலிகளின் தீர்வை ஏற்காவிட்டால் பிரச்சினைக்கு தீர்வே இல்லை" என்ற ஒரு கருத்தும் சிலரால் முன்வைக்கப்பட்டிருக்கிறது. விடுதலைப் புலிகளும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சிகளில் கலந்துகொள்வது அவசியம் என்பது இதர தமிழ் அமைப்புக்கள் ஏற்கனவே ஏற்றுக்கொண்ட விஷயம்.

ஆனால் புலிகள் தீர்வை ஏற்காவிட்டால் தீர்வே இல்லை என்ற கருத்தில் இருந்து கொண்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை முன்வைத்து இணக்கம் காண்பது சுலபமான காரியமில்லை.

இது இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சாதகமான ஒரு கருத்தென எண்ணிச்சொல்லப்பட்டிருந்தாலும், இது பிரச்சினையை சிக்கலாக்கக் கூடியதே. புலிகள் ஏற்காத எந்தத் தீர்வையும் தீர்வில்லை என்ற முடிவுக்கு வருவோமானால் புலிகள் எந்த தீர்வையும் தட்டிக் கழிப்பதற்கு எந்தத் தடையும் இருக்காது.

இதன்படி புலிகள் ஏற்கவேண்டும் என்பதற்காக முன்வைக்கப்படுகின்ற ஒரு தீர்வு நியாயமான தீர்வாக இல்லாமல் போகவும் வாய்ப்புண்டு. தமிழ் மக்களில் பெரும்பான்மையானவர்கள் ஏற்றுக்கொள்கின்ற ஒரு சமாதானத் தீர்வை புலிகளும் ஏற்றுக்கொள்வதுதான் தீர்வு எட்டப்படுவதை சாத்தியமாக்கும்.

தமிழ் மக்களின் பெரும்பான்மையானவர்கள் எனும்போது இதுவரை காலமும் ஈழத் தமிழர் இனப்பிரச்சினையில் உண்மையான அக்கறைகாட்டி வந்த எந்தவொரு அமைப்பினதும் எந்த ஒரு தனி நபரினதும் கருத்தும் கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டும்.

"இதர தமிழ் கட்சிகள் இயக்கங்கள் அரசியலில் ஈடுபடுவதே தமக்கு இடையூறு என்பது புலிகளின் கருத்து. எனவேதான் வேறெந்த அமைப்பின் அரசியல் செயற்பாட்டையும் அவர்கள் அனுமதிப்பதில்லை."

இப்போ இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் பின்னர் ஜனநாயகம் பற்றிப் பேசுவோம் என்பது அர்த்தமற்றது.

அண்டைநாடான இந்தியாவில் "வெள்ளைக்காரனிடம் போராடி வாங்கிய சுதந்திரத்தை அரசியல் கொள்ளைக்காரர்களிடம் விட்டுவிட்டோம்" "இரவிலே சுதந்திரத்தை வாங்கினோம் இன்னும் விடியவில்லை" என்ற கூக்குரல்களை நாமும் கேட்க முடிகிறது என்பது ஒருபுறமிருக்க, ஜனநாயகம் என்பதும் முற்போக்கு சிந்தனை என்பதும் எடுத்த எடுப்பில் ஒரு சமுதாயத்தில் நிலைபெற முடியாது. பயமுறுத்தியும் அதனை நீண்டநாள் பின்பற்ற வைக்க முடியாது. அன்றாட வாழ்வின் பிரச்சினைகள் தேவைகள் நடவடிக்கைகள் மூலம் தான் அதன் உன்னதம் மக்களால் உணர்ந்து கொள்ளப்பட வேண்டும்.

மக்கள் மத்தியில் பண்புரீதியான ஒரு மாற்றம் படிப்படியாகவே ஏற்பட முடியும். அதற்கும் நீண்ட தொடர்ச்சியானதொருபோராட்டம்அவசியம் என்பது புறக்கணிக்கப்படக்கூடாது.

புலிகள் அரசியல்தீர்வு ஒன்றை ஏற்க முன்வந்தால் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பது சுலபம். இது இன்றைக்குள்ள யதார்த்தம். ஆனால் இதுதான் என்றென்றைக்குமான யதார்த்தமாக இருக்கமுடியுமா?

– விதுரன்



"சமதர்மம், சோஷலிசம்தான் நம் இலக்கு. அரசியல், பொருளியல் ஆதிக்கம் மனிதனைப் படைப்பதில்லை, அழிக்கிறது. ஆதிக்கங்களை அழிக்கிற செயல்பாட்டின் மூலமே மனிதனின் படைப்புத்திறன் மேம்படும். சமதர்மத்துக்கான சூழலை ஏற்படுத்துவதும், சமதர்மத்துக்காக தன்னைப் படைத்துக் கொள்ளுவதும்தான் படைப்பாகும்." - ஞானி

இன்னும்
இரண்டாயிரம்
ஆண்டுகள் கழித்து
எனது கவிதைகளை
எவனேனும் ஒரு தமிழன்
கண்டெடுப்பான்
இலக்குமி குமாரன் ஞானதிரவியம்
என்ற என் பெயர் பற்றி
ஆச்சர்யம் அடைவான்
எனது இந்தக் காலத்தில்
பெண்களெல்லாம்
ஆண்களுக்கிணையாகக்
கருதப்பட்டனரென்றும்,
பெயர்களின் முன்னால்
தாயின் பெயரைப்
போட்டுக் கொள்ளும்
வழக்கமிருந்ததென்றும்
ஒரு வரலாற்று விளக்கம் சொல்லி
பல்கலைக்கழகமொன்றில்
முனைவர் பட்டம் பெறுவான்.
எனது தாய் எனது
தந்தையிடம் சவுக்கடி
பட்டதறியாமல்.



-இலக்குமி குமாரன் ஞானதிரவியம்

www.padippakam.com



# புலிகளின் இராச்சியத்திற்கு வெளியிலும் தான்தோன்றித்தனமான கொலைகள்

**கடந்த 19.02.95 அன்று வெளியான சண்டே லீடர் ஆங்கில வாரப்பத்திரிகையில் அவர்களது இராணுவ விவகாரங்களை அலசும் கட்டுரையாளரால் எழுதப்பட்ட கட்டுரையும் மேலும் தகவல்களும்**

இலங்கையின் முக்கியமான அரசியல்வாதிகளில் ஒருவரும் பாராளுமன்றவாதியுமான வாசுதேவ நாணயக்கார அவர்களும் வை.பி.டி.சில்வா அவர்களும் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட சமாதான விரும்பிகளும் சமாதானத்தை உருவாக்குவ்தற்காக சபதம்எடுத்து வவுனியாசென்றார்கள். வவுனியாவில் சமாதான ஊர்வலத்தை தொடர்ந்து ஓர் சமாதானத்திற்கான மாபெரும் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. இதில் ஆயிரக் கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

இந்தப் பொதுக்கூட்டத்திற்கு முன்னர் சமாதானத்திற்கான கோரிக்கை மனு ஒன்றில் பொதுமக்களிடம் கையெழுத்து வாங்கப்பட்டது. வடகிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற இக்கோரிக்கை மனு ஆயிரக்கணக்கான பொதுமக்களின் கையெழுத்துக்களுடன் ஜனாதிபதி சந்திரிகா அவர்களுக்கும் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட உள்ளது.



பொலிசார் நூற்றுக்கணக்கில் வந்து ஊர்வலத்திற்கும் பொதுக்கூட்டத்திற்கும் பாதுகாப்பு அளித்ததுடன் கொழும்பில் இருந்து வந்து கலந்துகொண்டவர்களுக்கும் பொலிசாரினால் முழுமையான பாதுகாப்பு வழங்கப்பட்டது. இது பொதுமக்கள் சமாதானத்திற்காக நடாத்தும் ஊர்வலம் என்பதாலோ என்னவோ இராணுவத்தினரை அங்கு பெருமளவில் காணமுடியவில்லை.

மிகப்பெரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் பொலிசாரினாலும் இராணுவத்தினராலும் ஏற்படுத்தப்பட்டுள்ள நேரத்திலும், புலிகளுக்கும் அரச தரப்பினருக்கும் இடையில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டிருப்பதற்கு மத்தியிலும் இவற்றை குழப்பக்கூடிய அபாய அதிர்வலைகள் புளொட் இயக்கத்தினாலும் அவற்றைப் போன்ற ஏனைய இயக்கங்களாலும் ஏற்படுத்தப்படுவதானது அமைதி முயற்சிக்குப் பங்கம் ஏற்படுமோ என மக்கள் மத்தியில் அச்சம் ஏற்படும் சூழலை உருவாக்கி வருகின்றது.

வவுனியாவிலும் சுற்றிலும் உள்ள மாவட்டங்களிலும் இந்த யுத்த நிறுத்தத்தின் பின்னர் ஓர் சுமூகமான சூழ்நிலை தோன்றியிருந்த போதிலும்கூட புளொட்டின் சட்டவிரோத நடவடிக்கைகளும் மக்களிடமிருந்து பணம் பறித்தல் போன்ற சமூகவிரோத நடவடிக்கைகளும் பொலிசாருக்கும் படையினருக்கும் மிகப் பெரும் தலையிடியைக் கொடுத்துவருகின்றது. ஆனால் இப்படியான நடவடிக்கைகளை புளொட் இயக்கத்தினர் மறுக்கின்றனர்.

வவுனியாவில் மக்களால் விநியோகிக்கப்பட்ட ஓர் துண்டுப்பிரசுரத்தின் மூலம் அங்கு என்ன நடைபெறுகின்றது என்பதை அறியக்கூடியதாக உள்ளது. புளொட் இயக்கத்தினர் நடாத்தும் சட்டவிரோத நடவடிக்கைகள் கொள்ளை, கடத்தல், வீடுகள், வேறு பொது ஸ்தாபனங்கள் என்பவற்றை உடைத்துச் சீரழித்தல், கலவரங்களை உருவாக்குதல் போன்ற பல்வேறுபட்ட செயற்பாடுகள் மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை தோற்றுவித்துள்ளது. கீழே நாம் குறிப்பிடும் சம்பவம் புளொட் இயக்க உறுப்பினர்கள் எவ்வாறு பொலிஸ் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றார்கள் என்பதைக் காட்டுகின்றது.

பொலிஸ்தரப்பு செய்திகளின்படி புஸ்பராஜா என்பவரது உழவு இயந்திரத்திற்கு சாரதியாக இருந்த தாஸ் என்பவர் அவர்களுக்கிடையில் ஏற்பட்ட சம்பளத் தகராறை தீர்த்துவைக்கும்படி புளொட் இயக்கத்திடம் முறைப்பாடு செய்தார். இதனைத் தொடர்ந்து வவுனியா புளொட் பிரதேச தலைவர் உழவு யந்திர சொந்தக்காரரான புஸ்பராஜாவை விசாரணைக்கு வருமாறு ஆணையிட்டார்.

ஆனால் அவர் போவதை தவிர்த்த காரணத்தால் அவரது தம்பியான துரைராஜா என்பவர் புளொட் காரியாலயத்திற்கு இதுதொடர்பாக பேசுவதற்குச் சென்றார். அங்கு துரைராஜா மிகவும் மோசமாக தாக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டார்.

அதேநாள் இரவு ஆயுதம் தரித்த புளொட் உறுப்பினர்கள் துரைராஜா வீட்டுக்குச் சென்று அவரை வெளியில் வருமாறு கதவைத் தட்டினர். பயத்தின் காரணமாக யாரும் பதில் பேசவில்லை.

புளொட் உறுப்பினர்கள் முன்கதவையும் பின்கதவையும் உடைத்துக்கொண்டு வீட்டுக்குள் பிரவேசித்தனர். அங்கு துரைராஜாவைக் காணாததால் அவரது மனைவியான யோகேஸ்வரி என்பவரிடம் அவரது கணவனின் இருப்பிடம் தொடர்பாக கேட்கப்பட்டது.

அங்கு இன்னுமொரு அறைக்கதவு மூடப்பட்டிருப்பதைக் கண்ட புளொட் இயக்கத்தினர் அதையும் பலாத்காரமாக உடைத்துத் திறந்தனர். அதற்குள் இருந்த துரைராஜா மிக மிருகத்தனமாக தாக்கப்பட்டு அவர்களது வேனில் ஏற்றப்பட்டார்.

இதேபோல் வீட்டிலிருந்த ஏனைய உறுப்பினர்களதும் கை,கால்கள் கட்டப்பட்ட பின்னர் வீட்டிலிருந்த பணம் மற்றும் ஆபரணங்கள் இவர்களால் கொள்ளையடிக்கப்பட்டன. எங்கெங்கு பணம் நகைகள் வைக்கப்பட்டுள்ளன என்பதைக் காட்டும்படி யோகேஸ்வரி துப்பாக்கி முனையில் மிரட்டப்பட்டார்.

இந்த களேபரத்துக்குள் இவர்களது சகோதரர்களில் ஒருவரான தியாகராஜா என்பவர் அங்கிருந்து தப்பிச் சென்று பொலிசாருக்கு முறைப்பாடு செய்தார். அதேசமயம் வேனிற்குள் இருந்த துரைராஜாவும் அங்கிருந்து தப்பி தனது சகோதரரான புஸ்பராஜா வீட்டுக்குச் சென்றார். அவர் அங்கு சென்ற பொழுது புஸ்பராஜா வயலுக்கு நீர்பாய்ச்சிவிட்டு மண்வெட்டியுடன் வந்து கொண்டிருந்தார். தனது சகோதரனின் வீட்டுக்குச் சென்றபொழுது சகோதரனின் மனைவியான யோகேஸ்வரி புளொட் இயக்கத்தினரால் துன்புறுத்தப்படுவதைக் கண்டு, தான் கொண்டு சென்ற மண்வெட்டியினால் தாக்கினார். இதில் புளொட் இயக்கத்தில் ஒருவர் இரத்தக்காயத்திற்குள்ளாகி வீழ்ந்தார். சில புளொட் உறுப்பினர்களால் இவர் வவுனியா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு கொண்டு சென்று அனுமதிக்கும் போது, அவர் இறந்துவிட்டதாக டொக்டர் கூறினார்.

**மக்களின் பாதுகாவலர்களாகத் தம்மைக் காட்டிக்கொண்டு அரசாங்கத்தின் நல்லெண்ணத்தை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தமது பாதுகாப்பிற்காக துப்பாக்கிகளையும் அரசிடமிருந்து பெற்றுக்கொண்டு, ஆயுத கலாச்சாரத்தின் மூலம் மக்களை அச்சுறுத்தி சிவில் நிருவாகத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்கின்றார்கள்.**

இதேசமயம் துரைராஜாவும் அவரது இன்னொரு சகோதரரான சதாசிவமும் பொலிஸ் நிலையத்திற்கு ஓடினார்கள். வானிற்குள் துரைராஜாவைக் காணாத புளொட் இயக்கத்தினர் பொலிஸ் நிலையத்திற்கு ஓடிய துரைராஜாவையும்சதாசிவத்தையும்துரத்திச்சென்று துரைராஜாவைக் கடத்த முயற்சி செய்தார்கள். இவர்களின் இந்த இழுபறியில் தனது சாரத்தையும் இழந்த துரைராஜா நிர்வாணமாகவே பொலிஸ் நிலையத்திற்குள் ஓடினார்.

வீதிக் கண்காணிப்பில் (ரோந்து) ஈடுபட்டிருந்த பொலிசார் இச்சம்பவத்தைக் கண்டு துரத்திக் கொண்டுவந்த புளொட் வாகனத்திற்கு சுட்டனர். ஆனால் புளொட் வாகனம் தப்பிச் சென்றுவிட்டது.

பொலிஸ் நிலையத்திற்கு வந்த துரைராஜா நடந்த சம்பவத்தைக் கூறியதும் பொலிசார் உடனடியாகவே அவ்விடத்திற்கு விரைந்து சென்றனர். அங்கு சென்றபொழுது புளொட் உறுப்பினர்களில் பலர் அவ்வீட்டுப் பொருட்களை கொள்ளையடிப்பதிலும், அவ்வீட்டை உடைத்து நாசமாக்குவதிலும் ஈடுபட்டிருந்தனர். பொலிசார் அவர்களைச் சுற்றிவளைத்ததும் பொலிசாரிடம் சரணடைந்தனர். பொலிசார் அங்கு ரி81 துப்பாக்கிகள், 2 மோட்டார் சைக்கிள், மண்ணெண்ணெய் நிரம்பிய பிளாஸ்டிக் கலன்கள் என்பவைகளையும் கைப்பற்றினர். கீழ்க்கண்டோர் சம்பவம் நிகழ்ந்த இடத்தில் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

1.செபஸ்தியன் யோசேப் (ரி56 ரக துப்பாக்கியுடன் கைது).
2.புஸ்பா நந்தகுமார்.
3.மனோகரன் மீனாகரன்.
4.கதிரவேலு அரசன்.
5.சுப்பிரமணியம் இரவிச்சந்திரன்.
6.தம்பிராஜா தர்மலிங்கம்.

சுப்பிரமணியம் நாதன் என்ற புளொட் உறுப்பினரே மண்வெட்டியால் தாக்கப்பட்டதால் உயிரிழந்த நபராவார். இவர் மாலைதீவு அரசைக் கவிழ்ப்பதற்காக மேற்கொண்ட முயற்சியில் மாலைதீவுப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு மாலைதீவில் தடுத்து வைக்கப்பட்டிருந்து விடுதலை செய்யப்பட்டவர். இவரது மரணம் கொலையென மரணவிசாரணையின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கொலையில் சம்பந்தமானவர் தற்பாதுகாப்பிற்காகவே இதனைச் செய்தார் என்ற பொழுதிலும்கூட அவர் தடுப்புக் காவலிலேயே வைக்கப்பட்டுள்ளார். அத்துடன் இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட புளொட் உறுப்பினர்களும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

புளொட் இயக்கமானது பொலிசுக்குச் சமாந்தரமான ஓர் அமைப்பை வவுனியாவில் நிறுவ முயற்சிப்பதாகவே தோன்றுகின்றது. கிரிமினல் குற்றமாக இருந்தாலென்ன இல்லையேல் சிவில் பிரச்சினைகளாக இருந்தால் என்ன இவர்கள் பொலிசாரின் உதவியை நாடாமல் தாங்களே அவற்றைக் கையாள்கின்றார்கள். ☞

## என்னைத் தேடி

ஆயுதப் போரை மறுத்ததற்காய்
நீயென்னைப் புத்தன் என்றாய்
"கசாப்புக் கடைக்காரன்
தானே கத்தியைக் கீழே போடான்"
எனச் சொல்வதெல்லாம்
இனி என்னால் ஏலாது
புத்தன் மிகத் தெளிவானவன்
இறந்த குழந்தையைத் தாய் ஏந்தி வரும்போது
"இறப்பது ஒருநாள் நிச்சயம் நிகழும்
கலங்கி இனி ஆவதென்ன தாயே!
எடுத்துச் செல்" என்றான்
குழம்பிப் போயிருக்கும் என்னிடம் வந்தால்
நான் என்னென்ன சொல்வேன்
❶ என்னிடம் ஏன் கொண்டுவந்தாய்
❷ கொன்றவன் காரணமில்லாமல் கொன்றான்
❸ எதுவும் இயற்கையாய் இறக்குமென
இனி நீ எண்ணாதே

\- சுகன் (பிரான்ஸ்)

படிப்பகம்

www.padippakam.com



மக்களின் பாதுகாவலர்களாகத் தம்மைக் காட்டிக்கொண்டு அரசாங்கத்தின் நல்லெண்ணத்தை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தமது பாதுகாப்பிற்காக துப்பாக்கிகளையும் அரசிடமிருந்து பெற்றுக்கொண்டு, ஆயுத கலாச்சாரத்தின் மூலம் மக்களை அச்சுறுத்தி சிவில் நிருவாகத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்கின்றார்கள்.

முன்னரும் இவர்களுக்கும் பொலிசாருக்கும் இடையில் பல மோதல்கள் நடைபெற்றுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து இவர்களால் பாதிக்கப்பட்ட வீட்டு அங்கத்தவர்கள் வவுனியா ஆஸ்பத்திரியில் இருந்து அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

15 அங்கத்தவர்களைக் கொண்ட இக்குடும்பம் இன்று வவுனியா பொலிஸ் நிலையத்தில்அகதிகளாக உள்ளனர்.அவர்களுக்கு இருக்க இருப்பிடமோ உணவோ கொடுக்கக்கூடாதென மக்கள் மிரட்டப்பட்டுள்ளனர். அவர்களது வயல் நிலத்திற்கு நீர்பாய்ச்சவோ இல்லையேல் விளைந்த நெல்லை அறுவடை செய்யவோ யாரும் செல்லக்கூடாது என்றும் அச்சுறுத்தப்பட்டுள்ளதுடன் வியாபார ஸ்தலங்களை திறக்கக்கூடாது என்றும் வியாபாரத்தை நடத்தக்கூடாது என்றும் மிரட்டப்பட்டுள்ளனர்.

இவ்வாறு விபரிக்கப்பட்டுள்ள அந்தத் துண்டுப்பிரசுரத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, அரசுக்கு இவையாவும் தெரிந்திருக்குமாயின் கீழ்க்கண்ட விடயங்களையும் அரசு தெரிந்திருக்க வேண்டும் என நாம் விரும்புகின்றோம்.

1. வவுனியா மன்னாரைச் சேர்ந்த மக்களாகிய நாம் ஏனைய குடிமக்களைப் போலவே புளொட் இயக்கத்தினதோ அல்லது ஏனைய இயக்கங்களதோ தலையீடு இல்லாமல் சமாதானமாக அமைதியாக வாழ விரும்புகிறோம்.

2. வவுனியா மன்னார் மக்களாகிய நாம் இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கும் இடத்தில் இருப்பதைவிட மற்ற இடத்தில் (புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில்) இருப்பதானது அதிகளவு பாதுகாப்பானதாகவும் சுதந்திரமானதாகவும் இருக்கும் என நம்புகிறோம்.

3. ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் வவுனியா மன்னார் மக்களாகிய எமது கஷ்டங்களைப் புரிந்து சில முக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

4. புளொட் அமைப்புக்குக் கொடுக்கப்பட்ட ஆயுதங்களையும், ஏனையோரிடமிருக்கும் சட்டபூர்வமற்ற ஆயுதங்களையும் உடனடியாக களையவேண்டும்.

5. புளொட் இயக்கத்தின் சட்டபூர்வமற்ற முகாம்களையும் சித்திரவதைக் கூடங்களையும், நீதிமன்றங்களையும் அவர்களது பொலிஸ்நிலையங்களையும் மூடிவிடவேண்டும்.

6. புளொட் இயக்கத்தால் பலாத்காரமாகக் கையகப்படுத்தப்பட்ட சகல வீடுகளையும் காணிகளையும் வீட்டுச் சொந்தக்காரர்களிடம் உடன் கையளிக்க ஆவன செய்ய வேண்டும்.

7. புளொட் உறுப்பினர்களுக்கு பாதுகாப்புத் தேவைப்பட்டால் பொலிஸ் இராணுவத்தினர் மூலமாக அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கவும்.

இவ்வாறு அந்தத் துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வவுனியாசம்பவத்தைத்தொடர்ந்துமேலும் பலகொலைச்சம்பவங்கள் புளொட்டினர்எனச் சந்தேகிக்கப்படுவோரால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவில் இருந்து பொலிஸ் பாதுகாப்புடன் புத்தளம் சென்ற இரு.........., வாகனச் சாரதி....உட்படமூவர் புத்தளத்திற்கு அண்மையில்வைத்து ரி56 ரக துப்பாக்கியால் சுடப்பட்டதில் இருவர் ஸ்தலத்தில் மாண்டதுடன் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக அனுராதபுரம் ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டுள்ளார்.இவர் - (வவுனியா) அக்குடும்பத்தைச் சேர்ந்தவர்.

இதுதொடர்பாக எவரும் இதுவரைகைது செய்யப்படாததானது பொலிசாரின் அசட்டையீனத்தையே காட்டுகிறது என வவுனியா மக்கள் கருதுகின்றனர்.

அதுமாத்திரமல்லாமல்ஆயுதபாணிகளான புளொட் இயக்கத்தினால் தாக்கப்பட்டு மிரட்டப்பட்டு மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் இவர்களுக்குப் பொலிசார் இதுவரை சரியான இருப்பிடவசதியோ, பாதுகாப்பு வசதியோ ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதனால் தமது வீடு, வயல், வியாபாரம் முதலிய அனைத்தையும் விட்டு தமது உயிர்ப் பாதுகாப்பிற்காக இவர்கள் கிளிநொச்சி செல்ல முயற்சித்து வருகின்றனர்.

இதுபோன்றே கடந்த ஆண்டு மன்னாரில் புளொட் உறுப்பினர்கள் பாலா என்ற வர்த்தகரின் வீட்டைக் கொள்ளையடிக்க முயற்சித்தபோது அவர்கள் கையும் களவுமாக இனங்காணப்படவே பாலாவின் தங்கையரைக் கொலை செய்துவிட்டு தப்பியோடிவிட்டனர். மன்னார் பொலிசாரின் தீவிர தேடுதலின் பின்னர் 3 புளொட் உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு தொடர்ந்தும் சிறைவாசம் அனுபவிக்கின்றனர்.

இவர்களைவிடுவிக்கக்கோரிதற்போதைய வன்னிப் பாராளுமன்ற உறுப்பினரும் புளொட் தலைவருமான சித்தார்த்தன் அவர்கள் பொலிசாரிடமும் இராணுவத்திடமும் பலமுறை அலைந்தும் மன்னார்இராணுவமும்பொலிசும் அதனை மறுத்ததுடன் சட்டம் தனது கடமையை செய்யும் என்றும் இவருக்குக் கூறியதாக அறியப்படுகின்றது.

இந்த இழுபறிநிலையைத்தொடர்ந்து மேற்படி கொலை வழக்கை வாபஸ்பெறக் கோரி வர்த்தகர் பாலாவை புளொட் உறுப்பினர்கள் பலமுறை வற்புறுத்தியதாகவும் அதற்கு அவர் மறுக்கவே கடந்த மாதம் அவரும் புளொட் இயக்க உறுப்பினர்களால் படுகொலை செய்யப்பட்டார்.

இப்படியான தொடர் கொலைகளால் மக்கள் விரக்தியும் வேதனையும் கொண்டிருப்பது இயற்கையானதே.



பாதுகாப்பற்றவர்கள் துன்புறுத்தப்படும்வரை, குற்றவாளிகள் சுதந்திரமாக நடமாடும்வரை நீங்கள் நிம்மதியாக இருக்கமுடியும் என்று எப்படி ஆசைப்பட முடியும்? பாதுகாப்பற்றவர்களைப் பற்றிய அக்கறை நம்மிடம் இல்லாதபோது அவர்களுக்கு எப்படி நியாயம் கிடைக்கும்?

- நிரபராதிகளின் காலம்

# அகதிகள் அனுபவிக்கும் துயரங்கள்



அகதிகள் முகாம் எங்கும் சமாதானத்திற்கான ஏக்கம் வியாபித்திருக்கிறது.அண்மையில் வடபகுதி வந்த சமாதானக் குழுவினர் வவுனியாவிலுள்ள அகதி முகாம்களுக்குச் சென்றார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் அவர்கட்கும் ஜனாதிபதி சந்திரிகா அவர்கட்கும் முகவரியிடப்பட்ட தபால் அட்டைகளை ஆர்வத்துடன் வாங்கி தமது சமாதான விருப்பத்தை தெரிவித்தனர்.

அரசின் கட்டுப்பாட்டிலுள்ள வவுனியா பகுதியில் 6 அகதிகள் முகாம்கள் உள்ளன. இதில் வவுனியா ஆசிகுளம், செட்டிக் குளத்திலுள்ள அடம்பன் குளம் ஆகிய முகாம்கள் யு.என்.எச்.சி.ஆர் ஆல் பராமரிக்கப்படுபவை.

மெனிக்மில் அகதிகள்முகாம் மனித உரிமைகளுக்கு ஒரு சவாலாக விளங்குகிறது. இந்த முகாம் அரசின் சிவில் நிர்வாக அமைப்புக்களால் பராமரிக்கப்படுகிறது என்பதனை விட இராணுவ, உளவுத்துறை, பொலிஸ் தலையீடு அதிகமாக உள்ளது. இங்கு அடிக்கடி கைதுகள் நடப்பதும் கைது செய்யப்பட்டவர்கள் வாரக்கணக்கில் அல்லது மாதக் கணக்கில் தடுத்து வைத்திருந்து விடுதலை செய்வதும் அன்றாட நிகழ்ச்சிகள்.

வவுனியா பகுதியிலுள்ள முகாம்களில் மிக மோசமாகப் பராமரிக்கப்படுவதும் இந்த முகாமே. இங்கு 235 குடும்பங்களைச் சேர்ந்த 723 பேர் அகதிகளாக இருக்கின்றனர்.

இத்தகைய நிலையில் இந்த முகாம் தொடர்ச்சியாகப் பராமரிக்கப்படுவது அரசின் நல்லெண்ணத்திற்குக் களங்கத்தை ஏற்படுத்தலாம். அகதி மக்களின் அன்றாடத் தேவைகளுக்காக கூட்டுறவுச் சங்கங்களையே நம்பி உள்ளனர். ஆனால் வவுனியா பகுதியில் சந்தையில் அரசி 15 ரூபாய்க்கு விற்கும்போது இங்கு 19 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. மைசூர் பருப்பு ஜனங்களுக்கு கிடைப்பதேயில்லை.

நத்தார்,தைப்பொங்கல்போன்றபண்டிகைக் காலங்களில்கூட கூட்டுறவுக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் கிடைப்பதில்லை.

அரசு பொருளாதாரத் தடையைத் தளர்த்தியிருந்தும் மக்களுக்கு எதுவுமே கிடைப்பதாகத் தெரியவில்லை என்று யாழ்ப்பாணம் சென்றுவந்த சமாதானத் தூதுக்குழுவினர் தெரிவித்தனர். அத்தியாவசியப் பொருட்களுக்கு மக்கள் ஆலாய்ப்பறப்பது தாம் கண்கூடாகப் பார்த்த காட்சி என்கிறார்கள்.

# வவுனியாவில் சமாதானப் பேரணி

(.....முன்பக்கத் தொடர்ச்சி)



புகைப்படக் கண்காட்சியில்....

படுகொலை செய்யப்பட்ட தலைவர்கள், இடித்தழிந்த மசூதிகள், தேவாலயங்கள், அகதிகள் என உருக்குலைக்கப்பட்ட மனித வாழ்வு சித்தரிக்கப்பட்டிருந்தது. பார்க்கும் எவரையும் துணுக்குற்றுப் போகச் செய்துவிடுகிறது.

பேரணி பயணக்களைப்பு ஆகியவற்றால் சற்றுச் சோர்வுற்றிருந்த மக்கள் நகரசபை மைதானத்தில் பரவியிருந்தார்கள். மாலையில் சமாதானக் கூட்டம் ஆரம்பமாகியது.

திரு. வாசுதேவ நாணயக்கார அவர்கள் உரையாற்றுகையில் பலியாகிய எமது சகோதரர்களின் சடலங்களைக் கொண்ட இருண்ட யுகத்தை நாம் கடந்து வந்துள்ளோம். இலங்கையின் வரலாற்றிலேயே முதன்முறையாக ஒரு சுதந்திர ஒளி வீசத் தொடங்கியுள்ளது என்று குறிப்பிட்டார்.

18ந் திகதி 36 பேர் அடங்கிய சமாதானக் குழுவினர் யாழ்ப்பாணம் புறப்பட்டுச் சென்றனர். 1994 நவம்பர் 9ம் திகதி கொழும்பில் நடைபெற்ற மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசுக்கும், புலிகளுக்கும் வழங்கப்பட்ட கோரிக்கைகள் அடங்கிய மகஜர் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது. சமாதானத் தூதுக் குழுவினருக்கு யாழ் மக்கள் அளித்த பெரு வரவேற்பு சமாதானத்தின் மீதான அவர்களின் பேரார்வத்தைக் கோடிட்டுக் காட்டுவதாக இருந்தது.

20ம் திகதி வவுனியா திரும்பிய சமாதானத் தூதுக்குழுவினர் வவுனியாவின் முக்கிய பிரஜைகளால் வரவேற்கப்பட்டனர். வவுனியா காமினி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வரவேற்புக்கூட்டத்தில் யாழ்மக்கள் படும் அவலத்தை உணர்ச்சி பொங்க விளக்கினார்கள்.

சிறிலங்கா மக்கள்கட்சியின் பொதுச்செயலாளா வை.பா.டி. சலவா உரையாறறுகையால இந்த நாட்டிற்கு என்ன நடந்தது என்ற கேள்வியை எழுப்பினார். கலாநிதி ஜெயதேவ உயங்கொட பேசும்போது இதுவரை நாம் உருவாக்கி வந்த கருத்துக்கள் எல்லாவற்றையும் மீள்பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது என்று குறிப்பிட்டார்.

பதவியாவில் பிறந்து வளர்ந்த ஒரு பத்திரிகையாளர் பேசுகையில் நான் பதவியாவில் அனுபவித்த துன்பங்களை விட 100 மடங்கு துன்பங்களை யாழ் மக்கள் அனுபவிக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்.

ஒரு மாதர்அமைப்பைச்சேர்ந்த பெண் பிரதிநிதி பேசுகையில் நானும் ஒருதாய். ஆனால் அங்குள்ள தாய்மார்கள் தமது பிள்ளைகளின் எதிர்காலத்தைத் தீர்மானிக்க உரிமையில்லாதவர்களாக இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்.

திரு. பற்றிக் பெர்னாண்டோ அவர்கள் பேசும்போது இராணுவத்தினரையும், பொலிசாரையும் விழித்து அங்கு என்ன செய்திருக்கிறீர்கள் என்பதைச் சற்றுப் பார்த்து வாருங்கள் என்றார். பெளத்த மதகுரு ஒருவர் பேசும்போது நான் எதையும் கூறவில்லை. நீங்கள் ஒருதடவை சென்று பார்த்து வாருங்கள் என்றார்.

சமாதானக் குழுவினரை யாழ் மக்கள் ஆரத்தழுவி வரவேற்றார்கள். சமாதானத்திற்கான பெரு நம்பிக்கையுடன் முத்தமிட்டு வழியனுப்பினார்கள்.





படிப்பகம்

www.padippakam.com



# சமாதானம் - தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள்





ஓர் சமாதானத் தீர்வுக்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைத்துவத்தை இணங்க வைப்பதற்கு, ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் எடுத்துள்ள உறுதியான, ஒரு நாட்டுத் தலைவிக்கே உரித்தான நடவடிக்கைகளுக்காக இந்த நாட்டின் அதி உயர் பதக்கங்களுக்கோ இல்லையேல் கௌரவத்துக்கோ அவர் உரியவராவார்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக தேர்தலுக்குமுன்பிருந்தே அவர் தனது உள்ள உணர்வுகளை தெளிவாகவே குறிப்பிட்டு வந்துள்ளார். கடுஞ் சிக்கல் வாய்ந்த இந்நாட்டு அரசியலில் தனித்தன்மை வாய்ந்த முயற்சியை மேற்கொள்வதற்கு தைரியமும் நேர்மையும் மிகவும் அவசியமாகும்.

10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இழுபறிப்பட்டுவரும் அர்த்தமற்ற சீரழிந்துபோன யுத்தத்தால் களைப்புற்றிருந்த நாடு, முன்னென்றுமில்லாத மிகப் பெரும்பான்மையானவாக்குப்பலத்தால் சமாதானத் தீர்வொன்றைக் காண சந்திரிகா அவர்களுக்கு தனதுஅனுமதியைவழங்கியுள்ளது.

இந்த யுத்தமானது நாட்டை கந்தறு நிலைக்கே கொண்டுவந்து விட்டது. ஆனால் மிகவும் பாரிய சர்வதேசக் கடனுதவிகளால் இன்னும்தலையைஉயர்த்திக்கொண்டுஇருக்கக்கூடியதாக உள்ளது. ஆனால் எவ்வளவு காலத்துக்கு? என்ன விலையைக் கொடுத்து இது நடைபெறுகின்றது?

மிகப்பெரிய சர்வதேசியக் கடனாளி என்ற விலையைக் கொடுத்து மாத்திரமல்ல, இதிலும்விட மோசமாக, எமது பொருளாதாரக் கொள்கைகள் யாவும் வெளிநாட்டுக் கடன்காரர்களின் அமுக்கத்திற்கு கீழடங்கியதாகவும் இருக்க வேண்டியுள்ளது.

இவற்றிற்கு மேலாக எமது மூலவளங்கள் யாவும் இந்த யுத்தத்திற்கே இடைவிடாது செலவு செய்ததால், முக்கியமான அவசரமான பொது வேலைகள் யாவும் புறக்கணிக்கப்பட்டன. வீதிகள் யாவும், திருத்தப்படாமல் மிகவும் மோசமானநிலையில் உள்ளது. மொத்தப் போக்குவரத்து சேவையும் தேவைக்கு போதியதாக இல்லை. கல்வி, சுகாதார வசதிகள்யாவும்மோசமானநிலையிலேயேஉள்ளது. முன்னைய அரசாங்கம் இன்றைய ஜனாதிபதிக்கு இவற்றை விட்டுச் சென்றுள்ளது.

## சமாதானத்துக்குத் தடையாக.....

துயரம் தோய்ந்த இந்த விடயங்களை விட்டாலும் சமாதானத்துக்குத் தடையாக இன்னொரு முக்கிய விடயம் உள்ளது. இது வடகிழக்கு (என்ன வடிவங்களிலாவது) மாகாணங்களுக்கு எவ்வளவு சுயாட்சியை கொடுக்கின்றோம் என்பதில் இல்லை. முழு வேலைப் பாட்டுக்குமுரிய ஒரு தடையாக இங்கு இருப்பது வேலுப்பிள்ளை பிரபாகரன் என்ற புலிகளின்தலைவரே. அவர் தற்சமயம் தனது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் முழுமையான அதிகாரத்தை அனுபவித்து வருகின்றார்.

இந்த நாட்டு ஜனாதிபதியின் சட்டபூர்வமான அதிகாரங்கள் என்பன மிகப் பாரியவை. ஆனால் இந்த அதிகாரங்கள் ஜனநாயக பாரம்பரியங்களாலும், மக்கள் கருத்துக்களாலும் வரம்பிட்டு கட்டுப்படுத்தப்படுகின்றன. இதனுடன் சுதந்திரத்துக்குப் பின் எமது நாட்டில் இருந்துவரும் பேய்த்தனமான இனவாதத்தில் இருந்து விடுபட்டு முற்போக்கான, பக்கசார்பற்ற சிந்தனைகளைக் கொண்டிருப்பவர் என்ற நற்பெயரையும் அவர் கொண்டுள்ளார்.

ஆனால் பிரபாகரனைப் பொறுத்தவரை அவருக்கு எந்தக் கட்டுப்பாடுமில்லை. அவரது அதிகாரங்கள் கட்டுப்பாடற்றவை. தனது மெய்ப்பாதுகாவலனையோ, அல்லது தனது தளங்களை விரிவுபடுத்தவோ இல்லையேல் தனது உளவுப்படையினோரா அவர்களது உறவினரோ தங்கவோஅல்லதுஅவருக்கு நெருக்கமானவரோ, கூஜா தூக்குபவர் தங்கவோ எந்தவித நட்ட ஈடும் இல்லாமல் எந்த தனியாரின் வீட்டையும் அவரால் கையகப்படுத்த முடியும்.

மிகப்பாரிய பிணைப்பணங்கள் அறவிடப்படுவதுடன் ஒன்றும் தப்பாமல் சகலவற்றிற்கும் வரியும் அறவிடப்படுகின்றது. வர்த்தக சமூகம் இதனால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. முன்னணி வர்த்தகர்களில் பலர் அங்கிருந்து வெளியேறி தம்மிடம் இருக்கக்கூடிய சொற்ப மூலதனத்துடன் தம்மை பராமரித்து வருகின்றார்கள். கொழும்பில் இருக்கக்கூடிய அகதிகள் இவைபற்றி பெரும் பெரும் தொகுப்புகளாகவே பேசுவார்கள்.

## ரோமப் பேரரசன்போல் தனித்து....

புலப்படாத அவரது ஆரம்பத்தில் இருந்து மின்னல் வேகத்தில் பிரபாகரன் அதிகாரத்துக்கு உயர்ந்தார். தனக்கெதிரான சகல எதிர்ச்சக்திகளையும் ஒன்றன்பின் ஒன்றாக அவர் ஒழித்தார். ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எவ் போன்றவை அழிக்கப்பட்டு, அவர்களது "எல்லை"க்கப்பால் விரட்டப்பட்டனர்.

விடுதலைக் கூட்டணி (மிதவாதிகள்) அங்கிருக்க முடியாது என்பதை உணர்ந்து அங்கிருந்து வெளியேறியபோதும் அவர்களது தலைவர்களில் இருவர் பின்னர் கொலை செய்யப்பட்டார்கள்.

இன்று பிரபாகரன் ரோமப் பேரரசன் சீசரைப் போல் தனித்து நிற்கின்றார். இன்று இருக்கக்கூடியமுக்கியகேள்விஎல்லாம் இவர் தனது அதிகாரம் ஆடம்பரம் ஆரவாரங்களை களைந்து சாதாரண பிரஜையின் வாழ்க்கைக்கு திரும்ப முடியுமா என்பதே.

சமாதானத்தின் படிமுறைகள் நிர்வாக முறைகள் எப்படி இருந்தபோதும்கூட நியாயபூர்வமான தேர்தல் ஒன்றினூடாக தோற்றுவிக்கப்படும் ஓர் ஜனநாயக அமைப்பு முறையை முழுமக்களும் ஏற்றுக்கொள்ள முடியும். இதில் வேறுஎந்தக்கேள்விக்கும்இடமிருக்கமுடியாது

## கொடுங்கோன்மைக்கு எதிர்ப்பு

தனிக்குழுவிற்குரிய எந்தவிதமான பிரதியேகமான பங்கீடுகளும் பிரபாகரனுக்கு கொடுக்க முடியாது. (அவருக்கும் அவரைச் சார்ந்தவர்களைப் போலவே அவரது குற்றங்களிற்காக பொது மன்னிப்பிற்கு அவர் உரித்துடையவர்.) ஆனால் அவரும் ஏனைய சாதாரண பிரஜையைப் போலவே தேர்தலுக்கு முகம் கொடுக்க வேண்டும்.

இரும்புக் கரங்களால் நசுக்கப்பட்டிருந்த குரல்கள் மீண்டும் கேட்கத் தொடங்கியுள்ளன. ஆனால் அது இரகசியமானதாகவோ குசுகுசுவானதாகவோதான் உள்ளது. சமாதானபேச்சுவார்த்தைஆரம்பங்களுடன் பிரபாகரனின் கொடுங்கோன்மை ஆட்சிக்கெதிரான எதிர்ப்புணர்வும் ஒன்றுதிரண்டு வருகின்றது. யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்டிருந்த அமைதியானது சமாதான தூதுக்குழுவை வரவேற்பது என்ற வடிவத்தில் தானாகவே வெடித்துக் கிளாந்துள்ளது.

மிகப்பெரும்பான்மையான மக்கள் ஓர் சமாதானத் தீர்வுக்காகவே இருக்கின்றார்கள் என்பதில் இனியும் யாரும் ஐயம் கொள்ளத் தேவையில்லை.

சிலகாலமாக மக்கள் மத்தியில் தான் செல்வாக்கிழந்து வருவதை பிரபாகரன் உணர்வார். மக்களின் நாடி ஓட்டத்தை அறியவே அவரது உளவாளிகள் பலர் பல இடங்களில் செயற்பட்டு வருகின்றார்கள்.

## தீர்வுக்கு உந்துமா?

இந்த சமாதானத் தூதுக்குழுவிற்கு வழங்கப்பட்ட சந்தோஷமான மாபெரும் வரவேற்பென்பது பிரபாகரனுக்கு பல செய்திகளைச் சொல்லும். மக்களின் இந்த நிலைப்பாடு சில சமயங்களில் பிரபாகரனை ஓர் தீர்வுக்கு உந்தலாம். அதுவும்கூட அவரதுமானத்தை காப்பாற்றிக் கொள்ளக்கூடிய ஓர் சூத்திரம் கிடைத்தாலே இது சாத்தியம். தமிழ் மக்களுக்கு எவ்வளவுதூரம் அதிகாரங்கள் வழங்கப்பட்டாலும் பிரபாகரன் என்னும் தனிமனிதன் அந்நியப்பட்டுப் போகும் எந்த ஓர் தீர்வையும் அவர் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

மறுபுறத்தில் பிரபாகரன் மீது பாரிய அமுக்கங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அவர் ஓர் சிறந்த ராணுவ தளபதியாக இருக்கலாம். ஆனால் மீண்டும் இராணுவ மோதல் ஒன்று ஏற்படும்பட்சத்தில்அவரதுஆட்சியில்அதிருப்தி அடைந்த பலர் அவருக்கெதிராக செயற்படத் தொடங்குவர். அவருடைய இராணுவ திறமைகளுக்கப்பால், நீண்டகாலத்திற்கு தனதுமக்களுடனும்,இராணுவத்துடனும்இரு முனைகளில் இவரால் போராட முடியாது.

பேச்சுவார்த்தையில் சமாதானத் தூதுக்குழு எதிர்கொள்ளக்கூடிய முக்கிய பிரச்சினை எதிர்காலத்தில் பிரபாகரனுடன் பேரம் பேசுதலும் அவர் எதிர்காலத்தில் என்ன பதவியில் இருக்கப்போகின்றார் (status quo) என்பதும்தான்.

அவர் நீதியான நியாயமான சுதந்திரமான தேர்தல் என்ற கொள்கையை ஏற்றுக் கொள்வாரா? எதிர்காலத் தேர்தல்களில் இவர்களின் கட்சியின் கை ஓங்குவதற்கு சரியான சந்தர்ப்பங்களும் உண்டு.

அவர் செய்த பாவ புண்ணியங்களுக்கு அப்பால் தமிழ்மக்களைப் பொறுத்தவரை பிரபாகரனின் ஆயுதப் போராட்டம் மூலமே அவர்கள் இழந்துபோன சுயகௌரவம் மீட்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு அவர் இன்னும் தேவைப்படலாம்.

## இங்கேதான் பிரச்சினை

ஆனால் ஜனநாயக நெறிமுறைக்குள்ளும் சட்ட வரம்பிற்குள்ளும் செயல்படுபவராக இருந்தாலே இத் தேவை ஏற்படலாம். அவரால் அதிகாரங்கள்துஷ்பிரயோகம்செய்யமுடியாத வடிவில் பாதுகாப்பு சரத்துக்கள் உருவாக்கப்பட வேண்டும். மக்கள் சுதந்திரமாக நடமாடும் நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். மக்களின் சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுடன்,அவர்களால் அபகரிக்கப்பட்டவை உரியவர்களுக்கு மீளக் கொடுக்கப்பட வேண்டும். களவாடப்பட்ட உடமைகள் கண்டுபிடிக்கப்பட்டு, கொள்ளைக்காரர் தண்டிக்கப்பட வேண்டும். சரியானமுறையில்அமைக்கப்பட்ட நீதித்துறையும் அதனை செயற்படுத்த தகுதி பெற்ற சட்டத்தரணிகள் இருக்க வேண்டும்.

அரசியல் தீர்வுக்கு முன்பாக பிரபாகரனுக்கு அளிக்கப்படும் சலுகைகள் யாவும் மிகப் பாரிய பின்விளைவுகளை உருவாக்கும். சமாதானத்திற்காக பிரபாகரனை நிர்ப்பந்திக்கக்கூடிய சக்தி எதுவாக இருக்கும்? ஓர் அந்நிய இராணுவ தலையீட்டால் முடியுமா? அல்லது வெளிநாட்டு உதவியால் முடியுமா?

## தீர்வு மக்களுக்கே

சமாதானத் தீர்வொன்றிற்கான திட்டம் முடிவுற்ற நிலையில் உள்ளதாக பத்திரிகை அறிக்கைகள் கூறுகின்றன. அத்திட்டம் எத்தகையதாக இருந்தாலும், ஒரு சுதந்திரமான நீதியான தேர்தலை உள்ளடக்கிய திட்டமாகவே அது இருக்க வேண்டும்.

சுதந்திரம், ஜனநாயகம், மனித உரிமைகள் போன்ற அடிப்படை அம்சங்களை கவனத்தில் எடுக்காமல் வெறுமனே பிரபாகரனை திருப்திப்படுத்தும் எந்த ஓர் திட்டத்தையும் தமிழ் மக்கள் மீது திணிக்கக் கூடாது.

பேச்சுவார்த்தைகள் இழுத்தடிக்கப்படுவதானது, பிரபாகரன் தனது இராணுவத்தை மீள அமைத்துக் கொள்ளவே உதவும். பிரபாகரனது தனிமனித தேவைகளை திருப்திப்படுத்தாவிடின் மீண்டும் ஓர் யுத்தம் தொடங்கலாம். இது தமிழ் மக்களை அழிவுக்கே இட்டுச் செல்லும்.

– என்.சுப்பிரமணியன், கொழும்பு-06.

(நன்றி: சண்டே ரைம்ஸ் 26.02.95)

# ஜனநாயகமுள்ள சமாதானம்





ஜனநாயகமுள்ளசமாதானம் தேவை" என்னும் குரல் இலங்கை முழுவதும் உரத்து ஒலிக்கத் தொடங்கியுள்ளது. இது யதார்த்த வெளிப்பாடு. இதனை சந்திரிகா அரசும் கருத்தில் கொண்டு, அதற்கான முன்னெடுப்புக்களை முடுக்கிவிட்டுள்ளது.

நமது 47 வருட அரசியல் வழிமுறையில் இது ஓர் திருப்பு முனை. இதனைச் சரிவரப் பயன்படுத்தி மக்களை அமைதியாய், சமாதானமாய் வாழ வைக்கக்கூடிய ஒரு சிறந்த தலைமையை தமிழ் பேசும் மக்கள் இத்தருணத்தில் பெற்றுக்கொள்ள முடியாமல் போனது துர்ப்பாக்கியமானதாகும்.

## புலிகளும் ஜனநாயகமும்

இன்றைய பேச்சுவார்த்தைகளில் முக்கிய பிரதிநிதிகளென புலிகளை ஜனாதிபதி சந்திரிகா குறிப்பிட்டதை திரிபுபடுத்தி புலிகள் மட்டும்தான் பிரதிநிதிகளென அர்த்தம் கொளளவைக்க சில புத்திஜீவித்தனமான கனவான்களும், பத்திராதிபர்களும் கங்கணம் கட்டிக்கொண்டு முனைந்து வருவது அப்பட்டமாகத் தெரிகிறது.

ஜனநாயகமுள்ள சமாதானத்தை நோக்கி அரசு மேற்கொள்ளும் முயற்சியில், புலிகள் முக்கிய பிரதிநிதிகளாக வருவதற்கு கடந்த காலங்களில் எத்தனை ஜனநாயக மீறல்களை மேற்கொண்டனர் என்ற இரத்தக்கறைபடிந்த வரலாற்று அத்தியாயங்கள் திட்டமிட்டு மறைக்கப்பட்டு, மறக்கப்பட்டு வருகின்றன.

இந்த வரலாறுகள் புதைகுழிகளில் மூடப்பட்டு அவற்றின்மேல் "புலிகள் மட்டுமே போராடினார்கள்" என்ற வாசகங்களை வரலாற்று நிரந்தரங்களாக்குவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சியே "புலிகள் மட்டும்தான் பிரதிநிதிகள்" என அர்த்தம் கொள்ளவைக்க பாடுபடுதலாகும்.

புலிகள் தமக்கு எதிரான கருத்துள்ளவர்களை கொலை செய்ததன் மூலம் ஜனநாயக சுதந்திர மறுப்புக்களை மேற்கொண்டு வந்துள்ளனர். விடுதலைக்காக போராடிய இயக்கங்களை தடைசெய்தனர். அதன் உறுப்பினர்களை, தலைவர்களை கொலை செய்தனர்.

ரெலோ தலைவர் ஸ்ரீசபாரட்ணம் உட்பட 133 போராளிகள் புலிகளால் கொல்லப்பட்டனர். இதில் எத்தனையோ போராளிகள் துடிக்கத்துடிக்க உயிருடனேயே எரிக்கப்பட்டனர். தம்முடன் ஒன்றாக உணவருந்திக் கொண்டிருந்த ரெலோ போராளிகளைக் கூட கொலை செய்தனர். சென்னையில் வைத்து ஈபிஆர்எல்எவ் செயலாளர் நாயகம் பத்மநாபா உட்பட 13 முக்கிய உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர்.

தொழிற்சங்கவாதிகளான விஜயானந்தன், அண்ணாமலை போன்றோர் கொல்லப்பட்டனர். கூட்டணித்தலைவர்களான அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் கொல்லப்பட்டனர். பாடசாலை அதிபர் ஆனந்தராஜா கொல்லப்பட்டார். புளொட்டில் மெண்டிஸ் உட்பட பலர் கொல்லப்பட்டனர். கந்தன் கருணையில் வைத்து 60 மாற்றியக்கப் போராளிகள் ஒரே அறையில் பூட்டியபடி புலிகளால் கொல்லப்பட்டனர். இதுதவிர தனிநபர் கொலைகள், சிங்கள மக்கள் கொலைகள், புலிகள் இயக்கத்துக்குள்ளேயே படுகொலைகள் என ஏராளம் ஏராளம்.

புலிகள் அரசபடையினரைக் கொன்றதை விட பொதுமக்களை, இயக்க உறுப்பினர்களை, அரசியல் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்களை கொன்றதே அதிகம். இவர்களுக்கெல்லாம் புலிகள் கொடுத்த ஒரேஒரு வரப்பிரசாத வாசகம் "துரோகி".

இப்படியெல்லாம் மனித நேயத்தை குழிதோண்டிப் புதைத்து, மானுடவர்க்கத்தை வெட்கித் தலைகுனிய வைத்து, போராட்டத்தை, அதன் நோக்கத்தை மழுங்கடித்து, அதீத சாகசங்கள் புரிந்து இரத்தத்தின் மூலம் தேடிக் கொண்ட கறைபடிந்த வார்த்தைதான் இந்த "முக்கிய பிரதிநிதிகள்".

மேற்படி வரலாற்றை இந்த புத்திஜீவிக் கனவான்களும், பத்திராதிபர்களும் மறைக்க, மறுக்க முயற்சிப்பது விந்தையானது. ☞

படிப்பகம்

www.padippakam.com



# யாழ் தேர்தல் வழக்கு

## சிறுவர்கள், இறந்தவர்கள், திரும்பத் திரும்ப வந்தவர்கள் எல்லாரும் வாக்களித்தார்கள் என நீதிமன்றில் சாட்சியம்



## ஊர்காவல் படையினருக்கு நன்றிக்கடன் செலுத்திய தேர்தல்

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 16ம் திகதி நடந்த யாழ் மாவட்ட பாரா ளுமன்ற தேர்தலை ஆட்சேபித்து ஈ.பி.ஆர்.எல்.எவ்வைச் சேர்ந்த தம்பி ராஜா சுபத்திரன், தேர்தல் சுயேட் சைக்குழு–I இல் போட்டியிட்ட கிருஸ்ணபிள்ளை பாஸ்கரன், துரைசிங்கம் நகபாலன், சிவபாதம் வினோதலிங்கம், முஸ் லிம் காங்கிரசைச் சேர்ந்த எம்.ஏ.சி.இக்பால் ஆகியோர் தனித்தனியாக மூன்று வழக்கு களைத் தாக்கல்செய்திருந்தனர்.இந்தமூன்று வழக்குகளும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் சரத் என் சில்வா முன்னிலையில் ஒன்றாகவே விசாரிக்கப்படுகிறது.

இந்தவழக்குகளில் தேர்தல்ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா, யாழ் அரசாங்க அதி பர் பி.மாணிக்கவாசகர், தெரிவு அத்தாட்சி அதிகாரியாக பணியாற்றிய லக்ஷ்மன் பெரேரா மற்றும் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் 33 பேர் ஆகியோர் பிரதிவாதி களாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஈபிஆர்எல்எவ் சார்பில் நிரஞ்சன் சின்னத் தம்பி, ரமணி முத்தட்டுவேகம, ஏட்லி சென விரட்ன ஆகியோரும், சுயேட்சைக்குழு–I சார்பில் ஜயம்பதி விக்கிரமசிங்க, கிளாஸ்டன் ஜெயக்கொடி ஆகியோரும் முஸ்லிம் காங்கி ரஸ் சார்பில் நிசாம் காரியப்பரும் ஆஜராகு கின்றனர்.

### கி. பாஸ்கரன் சாட்சியம்

17.02.95வெள்ளியன்று மேன்முறையீட்டு நீதியரசர் சரத் என் சில்வா முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டபோது மனுதாரர்களில் ஒருவரான கி.பாஸ்கரன் சாட்சியமளித்தார். அவரது சாட்சியத்தில்–

யாழ் மாவட்டத்தில் ஐந்தில் நான்கு பகுதி கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. பலாலி, காங்கேசன்துறை, மாதகல், தெல்லிப் பளை, ஊர்கா வற்றுறை, மற்றும் தீவுப் பகுதிகள் இராணுவம், கடற் படை மற்றும் ஈபிடிபியினரின் கட்டுப் பாட்டில் உள்ளன. ஆனையிறவு, பூநகரி, வெற்றிலைக்கேணி பகுதிகளும் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ளன.

யாழ்மாவட்ட தேர்தல்தொகுதியில் உள்ள வாக்காளர் பட்டியல் எமக்குத் தரப்படவில்லை. கேட்டோம் இல்லை என்று சொல்லிவிட்டார் கள். தேர்தல் இடம்பெற்ற தீவுப்பகுதிகள் ஈபிடிபியினரின் கட்டுப்பாட்டில் உள்ளன. அங்கு வாக்காளர்களிடம் வாக்காளர் அட்டை கள் இருக்கவில்லை. தேர்தல் கண்காணிப்பா ளர்களாக இருந்தவர்கள் சிறுவர்கள் வாக்க ளித்தபோதும் கண்டுகொள்ளவில்லை.

எதிர்ப்புத் தெரிவித்திருந்தால் எம்மால் திரும்பி வந்திருக்க முடியாது. தேர்தல் பிரச்சா ரத்தின்போது ஈபிஆர்எல்எவ் இனரே அதிகம் பாதிக்கப்பட்டார்கள். அனலைதீவுக்கு உறவி னர்களைப் பார்க்கச் சென்ற எமது அங்கத்த வர்கள் ஈபிடிபியினரால் கடத்திச் செல்லப் பட்டு தாக்கப்பட்டார்கள் என்றும் கி.பாஸ் கரன் தெரிவித்தார்.

### கேதீஸ்வரன் சாட்சியம்

அன்றைய தினமே ஈ.பி.ஆர்.எல்.எவ் சார் பில் முதலாவது சாட்சியாக அழைக்கப்பட்ட அரசியல்பீட உறுப்பினர் எல். கேதீஸ்வரன், பாராளுமன்ற தேர்தல் தொடர்பாக தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா நடத் திய ஆலோசனைக் கூட்டங்கள் குறித்து விளக்கமளித்தார். அவர் கூறியதாவது–

தேர்தல் ஆணையாளர் நடத்திய ஆலோச னைக் கூட்டங்களில் ஈபிஆர்எல்எவ் சார்பில் நான் கலந்துகொண்டேன். முதல் கூட்டம் ஜூலை 15ல் நடந்தது. வடபகுதி நிலைமையை அறிய அன்று நண்பகல் விசேட கூட்டம் நடந் தது. முப்படைத் தளபதிகளும், பாதுகாப்பு அமைச்சின்செயலாளரும், ஈபிடிபிஅமைப்பின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவும் கலந்து கொண்டார்கள்.

அப்போது ஈபிடிபியை நிராயுதபாணியாக்கும் கோரிக்கையை முன்வைத்தோம். அதை ஏற்கமறுத்த பாதுகாப்பு அமைச்சின் செயலா ளர் ஹமில்டன் வணசிங்க, அவர்களின் பங்க ளிப்பு எமக்கு முக்கியமானது. அவர்கள் எங்கள் ஊர்காவல் படையினர். அவர்களு க்குநாங்கள் நன்றிக்கடன்பட்டுள்ளோம் என்று தெரிவித்தார்.

ஜனநாயகத் தேர்தலென்று வரும் போது ஈபிடிபி கடந்தகாலத்தில் ஆற்றிய பங்கு என்பது சம்பந்தமற்ற விடயமாகும். குறிப்பாக அரசியல் கட்சி என்றும் ஊர்காவல் படை என்றும் இரட்டை வேடத்திலி ருந்துகொண்டு தேர்தலில் பங்கு பற்றுவதானது ஜனநாயக நடை முறைகளுக்குக் குந்தகம் விளைவிக்கும் செயலாகும்.

வாக்குச்சாவடிகள் சிலதினங்களில் முடிவு செய்யப்படுமென்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். ஜூலை 22ல் நடந்த கூட்டத்தில் ஜூலை 27ல் என்று அறிவித்தார். ஆனால் ஜூலை11 என்று திகதியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு ஜூலை29ல்தான் அறிவிக்கப்பட்டது.

### வாக்காளர் பட்டியல்

15ம் திகதிய கூட்டத்தில் வாக்காளர் பட்டி யல் தொடர்பான இரு தமிழ் தொகுதிகள் காணாமல்போய்விட்டதாக சொன்னார். பின்னர் தருவதாக கூறியபோதிலும் எமக்கு அது ஒருபோதும் தரப்படவில்லை.

யாழ் மாவட்டத்திற்கு 86ம் ஆண்டு தயா ரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியல் அதன்பின் னர் புதுப்பிக்கப்படவேயில்லை. 86இன் பின் னர் இடம்பெயர்ந்தவர்கள் உள்ளனர். புலிகள் –இந்திய அமைதிப்படை யுத்தம் 1990 ஜூன், ஜூலையில் நடந்தது. முஸ்லிம்கள் அப்பகுதி யிலிருந்து திட்டமிட்டே வெளியேற்றப்பட் டனர். பயங்கரவாத நிலை காரணமாக வெளியேறியவர்களும் உண்டு.

86ம் ஆண்டில் யாழ் தேர்தல் மாவட்டத்தில் இருந்தவர்கள் இப்போதும் உள்ளார்கள் என்று சொல்லமுடியாது. இராணுவக் கட்டுப் பாட்டில் உள்ள பகுதிகளில் ஆட்கள் இல்லை.

### கனகரட்ணம் சாட்சியம்

இந்த விசாரணை 24.02.95 வெள்ளிக்கிழ மை அன்று விசாரணைக்கு எடுத்துக் கொள் ளப்பட்ட போது யாழ் மாவட்ட ஈபிஆர்எல்எப் வேட்பாளராக போட்டியிட்டவரும் முன்னாள் ஆசிரியருமான நெடுந்தீவைச் சேர்ந்த கந்தை யா கனகரட்ணம் சாட்சியமளிக்கையில்–

நெடுந்தீவு, புங்குடுதீவு பகுதிகளில் ஆசிரி யராக இருந்துள்ளேன். 89ம் ஆண்டில் ஓய்வு பெற்றபின் நெடுந்தீவிலேயே இருந்தேன். 93 ஜனவரியில் கொழும்பு வந்தேன். தேர்தல் வேலைக்காக கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 7ம்திகதிதிருமலைபோய்காரைநகர்போனேன். நெடுந்தீவு போக படகு சேவை இல்லாததால் அனலைதீவில் கொஞ்சநாள் இருந்துவிட்டு நெடுந்தீவு போனேன்.

அதற்கு முன்னதாக நயினாதீவு, எழுவை தீவு ஆகிய இடங்களுக்கும்போனேன். ஈபிடிபி யினர்ஆயுதங்களுடன் திரிந்தார்கள். 93வரை யில் அங்கு சுமார் 3000 பேர் இருந்தார்கள். இவர்களில் சிலர் இறந்து போயிருக்கலாம்.

காலையில் மட்டும் இறந்தவர்களின் வீடு போய் என் அனுதாபத்தை தெரிவித்தேன். (நீதியரசர் சரத்என்சில்வா, அதுஅரசியல்வாதி களுக்கு உரியதொன்று) பிரசார வேலைக்கு ஒழுங்கை வழியாகத்தான் போனேன்.

### புதுவித வாக்காளர்அட்டை

பிரதான வீதிகளில் ஈபிடிபியினர் வாகனங் களில் ஆயுதங்களுடன் திரிந்தார்கள். நெடுந் தீவில் எனக்கும் பிள்ளைகளுக்கும் வாக்குகள் உண்டு. நான்கு தேர்தல்களில் வாக்களித்துள் ளேன். இம்முறை வழங்கப்பட்டது போன்ற "ரோனியோ" செய்யப்பட்ட வாக்காளர் அட்டையை நான் ஒருபோதும் கண்டதில்லை.

14ம் திகதி அப்பகுதி கிராமசேவகர் பூபால சண்முகம் கொண்டுவந்து விநியோகித்தார். (அந்த வாக்காளர் அட்டையை சாட்சி அடை யாளம் காட்டினார்.) அது எனது மகனுக்கு வழங்கப்பட்ட வாக்காளர் அட்டை. என் மனைவி பிள்ளைகளுக்கும் கிடைத்தது.

90 முதல் 93ம் ஆண்டு காலப்பகுதியில் நெடுந்தீவில் இராணுவம்,கடற்படை,பொலிஸ் என்று யாரையும் நான் பார்க்கவில்லை.

ஈபிடிபி நிக்ஸன்தான் நெடுந்தீவுக்கு பொறுப் பாக இருக்கிறார். இப்போது அவர் எம்பி. இந்த நீதிமன்றத்திலும் உள்ளார்.

நெடுந்தீவு கிழக்கு வாக்குச்சாவடியில் 8.10க்கு வாக்களித்தேன். எனது தேர்தல் பிரதிநிதியாக மனைவி இருந்தார். இந்த வாக்குச்சாவடியில் பெயர் குழப்பங்கள் நிறைய இருந்தன.

15 நிமிடங்கள் அங்கு இருந்துவிட்டு மத்திய மகளிர் வித்தியாலய வாக்குச்சாவ டிக்குப் போனேன். அங்கும் 9.30க்குப் போய் எனது பிரதிநிதி ஒருவரை நியமித்தேன். ஏற்கனவே வாக்குப்பதிவு ஆரம்பமாகியிருந் தது. சிலரைப் பார்த்தேன். வயது குறைந்தவர் களாக இருந்தார்கள். வீட்டுக்கு அருகே மீன் சந்தை உள்ளது அங்கு இந்த சிறுவர்கள் வருவதைப்பார்த்துஇருக்கிறேன். அவர்களின் பெற்றோரையும் எனக்குத் தெரியும்.

### இறந்தோர் வாக்கு

நெடுந்தீவு மேற்கு வாக்குச்சாவடிக்கு சைக்கிளில் போனேன். 3 மைல் தூரம் இருக் கும். சைவப்பிரகாசவித்தியாலயத்தில் தேர்தல் கடமையில இருநதவாகள அனைவருாம ஆசிரியர்கள். சிலர் எனது மாணாக்கர்கள். சிலர் என்னுடன் ஒன்றாகப் படித்தவர்கள்.

கிழக்கிலும் மத்தியிலும் வாக்களித்தவர் கள் இங்கும் வந்தார்கள். அரை மணித்தியா லத்தின் பின் நிக்ஸன் வந்தார். துப்பாக்கி ஏந் திய ஒருவர் அவரை மோட்டார் சைக்கிளில் வாசலில் கொண்டுவந்து விட்டுப் போனார்.

அவர்தேர்தல்அதிகாரியின் அருகில்போய் அமர்ந்தார். சிறுவர்கள், இறந்தவர்கள் பேர்களிலும் ஏற்கனவே வாக்களித்தவர்களும் அங்கு வாக்களித்தார்கள். தேர்தல் அதிகாரி யிடம் முறையிட்டேன். அவர் எந்த நடவடிக் கையும் எடுக்கவில்லை.

ஒன்று ஒன்றரை மணியளவில் கண்கா ணிப்புக் குழுவைச் சேர்ந்த இரு வெளிநாட் டவர்கள் வந்தார்கள். ஏற்கனவே வாக்க ளித்து விட்டு மீண்டும் வாக்களிக்கவந்த இரு சிறுவர்கள் அவர்களிடம் வகையாக மாட்டிக் கொண்டார்கள்.

கிழக்கே இருந்து வந்தவர்கள், 10 மணி போல எனது மனைவி விரட்டப்பட்டதாக கூறி யதால் இனியும் இங்கிருந்து பிரயோசனம் இல்லை என்று 2 மணிபோல வாக்குச்சாவடி யை விட்டு வெளியேறினேன்.

மேல் விசாரணை பங்குனி மாதம் 20ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

---

(.....6ம் பக்கத் தொடர்ச்சி)

இயக்கத்துக்குள் ஜனநாயக மறுப்பு, இயக் கங்களுக்கிடையில் ஜனநாயக மறுப்பு, மக்க ளுக்கு ஜனநாயகமறுப்பு என நடந்துவந்த புலி கள் ஏனைய இயக்கங்களின் போராடும் உரி மையை பறிக்காதிருந்தால் இந்த "முக்கிய பிரதிநிதிகள்" என்ற இடத்தை பெற்றிருப் பார்களா என்பது சிந்தனைக்குட்படுத்த வேண்டிய விடயமாகும்.

## புலிகளும் மனிதநேயமும்

அண்மையில் பேச்சுவார்த்தை புற்றி அறி விக்கப்பட்டபோது புலிகள் தம்மை நல்லபிள் ளைகளாகக் காட்ட 10 பொலிசாரை விடு தலை செய்தனர். இரண்டாவது பேச்சுவார்த் தையின் காலையில் இரண்டு பொலிசாரை விடுவதாய் அறிவித்தனர். பின்னர் காலையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை பற்றி விபரங்கள் பிரபாகரனுக்கு அறிவிக்கப்பட்டபோது அவர் மனம் குளிர்ந்து இன்னும் இரண்டு பொலி சாரை விடுவிப்பதாய் அறிவித்தார் என தெரிய வருகிறது.

முன்னொருமுறைகிட்டுவும்,கைதுசெய்து வைத்திருந்த படையினரின் பிறந்தநாளுக்கு தங்கச்சங்கிலிபரிசளித்துவிடுதலைசெய்தார்.

முன்பொரு தடவை புலிகள் பழிக்குப்பழி வாங்க கைதுசெய்து வைத்திருந்த படையின ரை கொன்றனர். ஆகவே விடுதலையாகி வந்தவர்கள் தலை தப்பியவர்கள். ஆனால்....

வடக்கு கிழக்கு பகுதிகளில் விடுதலை வேண்டி போராட முற்பட்டவர்கள், புலிகளின் அடக்குமுறைகளுக்கு அடிபணிய மறுத்தவர் கள், புலிகளின் ஜனநாயக, சுதந்திர மறுப்புக் களை வெளிப்படுத்த முனைந்தவர்கள் என புலிகளால் கைது செய்யப்பட்டு அவர்களின் சித்திரவதை முகாம்களில் அடைபட்டுக் கிடக்கும் 6000க்கும் மேற்பட்ட இளைஞர்கள், யுவதிகள், முதியவர்கள் பற்றி யாரும் அலட்டிக் கொள்வதாய் தெரியவில்லை.

இவர்களை விடுதலை செய்யும்படி யாரும் கோரிக்கைவிடுவதில்லை. எந்தப் பேச்சுவார்த் தைகளிலும் இவர்கள் பற்றிய அம்சம் சேர்க் கப்படுவதில்லை. புலிகளால் மறைக்கப்பட்ட இவர்கள் கிட்டத்தட்ட மறக்கப்பட்டுவிட்டார் கள். இவர்கள் உயிருடன் இருக்கிறார்களா? என்பதுகூட யாருக்கும் தெரியாது.

தாம் கறைபடியாதவர்கள், ஜனநாயக முள்ள சமாதானத்தில் நம்பிக்கை உள்ளவர் கள் எனப் புலிகள் கூறுவார்களாயின் அதன் முதற்படியாக கைது செய்து வைத்துள்ள ஆயிரக்கணக்கான தமிழ் பேசும் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும்.

புலிகள் ஜனநாயகமுள்ள சமாதான விரும் பிகளென கூறிக்கொள்வோர் இந்த ஆயிரக் கணக்கானதமிழ்பேசும்கைதிகளைவிடுதலை செய்யும்படி புலிகளைக் கோர வேண்டும்.

ஜனநாயகமுள்ள சமாதானம் வேண்டி புலிகளுக்கும், அரசுக்கும் வேண்டுகோள்க ளும் ஆலோசனைகளும் வழங்கும் அனைத்து அரசுசார்பற்ற நிறுவனங்களும் இந்த ஆயிரக் கணக்கான தமிழ் பேசும் கைதிகளை விடுதலை செய்யவும் வேண்டுகோள் விடுக்க வேண்டும்.

– சாரதி, ஜெர்மனி.

---



சிந்தி, யோசித்தால் விடைகள் கிடைக்கும்.... இங்கே மாறுதல் வரும். உங்கள் விருப்பத்தினால் அல்ல, உங்களுக்குப் பின்வருபவர்களின் நிர்ப்பந்தத்தினால்.... ஆனால் அரசியல் மாறாது. உங்கள் கலாச்சாரத்தை நசிவில் இருந்து மீட்டு எடுக்காத வரையில் உங்கள் அரசியல் மாறாது.

- மாலன்

படிப்பகம்

www.padippakam.com



யுத்தத்தை நிறுத்துவோம் சமாதானத்தை கொண்டுவருவோம் அமைதியைக்கொண்டுவருவோம் என முழங்கி புதிய ஜனாதிபதி அதிகாரத்துக்கு வந்து 4 மாதங்கள் உருண்டோடிவிட்டன.

ஆனால் சமாதானம் தோன்றுவதற்கான அறிகுறி இன்னும் கண்ணுக்கு எட்டிய தொலைவில் கூடத் தென்படவில்லை.

மூன்று சுற்று பேச்சுவார்த்தைகள் முடிந்த நிலையில் 4வது சுற்று பேசப்போகின்றோம் என்ற பரபரப்பான செய்திகள் வந்து கொண்டிருக்கின்றனவே அல்லாமல், பேச்சுவார்த்தைகள் சுமுகமாகச் செல்வதாகத் தெரியவில்லை. சமாதானத்துக்கான ஊர்வலங்கள், சமாதானத்துக்கான சொற்பொழிவுகள் நடைபெறுகின்றனவே இல்லாமல், சமாதானத்துக்கான பேச்சுவார்த்தைகள் நடவடிக்கைகள் மந்தகதியிலேயே நகர்கின்றன.

அரசாங்கம் யாழ் குடாநாட்டை அபிவிருத்தி செய்ய அதாவது வீதிகளைப் புனரமைக்க, மின்சாரம் கொடுக்க, பொது நூலகம் கட்ட தேவையான தார், ஜெனேரட்டர் மற்றும் தேவையான கட்டடப் பொருட்களை கப்பல் மூலம் யாழ்அனுப்பிஉள்ளதாகத்தெரிவிக்கின்றன. இப்பாரிய பொருட்களைக் கொண்டு செல்ல ஓர் வீதியைக் கூட திறக்க முடியாத நிலையில்தான் பேச்சுவார்த்தைகள் தொடர்கின்றன.

சங்குப்பிட்டி-பூநகரிப் பாதையும், ஆனையிறவுப் பாதையும் ஏககாலத்தில் திறக்கப்படுமென ஜனாதிபதியின் செயலாளரும் பாதுகாப்பு பிரதி அமைச்சரும் கூறுகின்றனர்.

மக்கள் சமாதானத்தையும், ஜனநாயகத்தையும் உருவாக்க வேண்டும் என்பதில் விடாப்பிடியாக உள்ளார்கள் என்பதை அண்மைய சமாதான ஊர்வலங்களும், அதற்கு மக்கள் கொடுக்கும் ஒத்துழைப்பும் துலாம்பரமாக வெளிப்படுத்துகின்றன.

வவுனியாவில் நடந்த சமாதான ஊர்வலமும், அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாண மக்கள் தென்னிலங்கை சமாதான தூதுக்குழுவிற்கு கொடுத்த வரவேற்பும் மக்கள் சமாதானத்தில் கொண்டுள்ள அக்கறையையும், அதன் அவசர அவசியத்தையும் வெளிப்படுத்துகின்றன.

ஆனால் புலிகளும் அரச தரப்பினரும் தமது இராணுவங்களை பலப்படுத்துவதில் அக்கறையாக இருக்கின்றனர். அமைச்சரோ, அரசாங்கமோ மறுத்தாலும் கூட கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் புலிகள் புதியவர்களைச் சேர்ப்பதிலும், அவர்களுக்கு பயிற்சி கொடுப்பதிலும் அக்கறை எடுப்பதுடன் நீண்டகாலத்துக்கு தேவையான அரிசி, பருப்பு, பெற்றோல், போன்ற பல்வேறுப்பட்ட பொருட்களை சேமிப்பதிலும், மக்களிடம், கப்பம், வரிவசூலிப்பதிலும் ஈடுபட்டு வருகின்றார்கள். இது ஒன்றும் இரகசியமாக நடைபெறவில்லை. எல்லோருக்கும் தெரியவே இதனைச் செய்கின்றார்கள்.

இதனைப் போன்று அரசாங்கமும், இராணுவத்துக்கு ஆட்களைச் சேர்ப்பதிலும், புதிய தளவாடங்களை ஆயுதங்களை இறக்குமதி செய்வதிலும் ஈடுபட்டு வருகின்றது. முன்னர் இடைத்தரகர்கள் மூலம் நிறைய ஊழல்கள் நடைபெற்றன. இப்பொழுது அரசாங்கம் வேறு அரசாங்கங்களிடம் இருந்து நேரடியாக பெறுவதால், ஊழல்கள் குறைந்திருக்கலாம்.

# தேக்கநிலையை அகற்ற தீர்வை முன்வையுங்கள்

இதற்காக பூநகரி இராணுவ முகாம் 500 மீற்றர் பின்தள்ளப்படுமெனவும் கூறுகின்றனர். ஆனால் புலிகளோ பூநகரி முகாம் முழுமையாக எடுக்கப்பட வேண்டுமென வற்புறுத்துகின்றனர். இப்படியான அற்ப விடயங்களிலேயே விடாக்கண்டன் கொடாக்கண்டனாகவே இருபகுதியினரும் செயற்பட்டு வருகின்றனர்.

அரசாங்கம் ஒத்துக்கொண்ட விடயங்களையே நடைமுறைப்படுத்தவில்லையென புலிகளும், புலிகள் புதுப்புது நிபந்தனைகளை விதிக்கின்றார்கள் என அரசாங்கமும் பரஸ்பர குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதும், பேச்சுவார்த்தைகள் மந்தகதி அடையும்போது புலிகள் யுத்த நிறுத்தத்தை மீறுகின்றார்கள் என அரசு சார்பு பத்திரிகைகள் எழுதுவதும், அதே போன்று அரசையும் அதன் அணுகுமுறைகளையும் புலிகள் விமர்சிப்பதிலுமே காலம் விரயமாகின்றது.

அதேசமயம் தேவையேற்படும்போது புலிகளால் யுத்த நிறுத்த மீறல்களே நடைபெறவில்லையென அமைச்சரும், அரசாங்கத்தில் நம்பிக்கையுண்டென புலிகளும் இடைக்கிடை அறிக்கைகள் விட்டும் வேடிக்கை காண்பிக்கின்றனர்.

மொத்தத்தில் ஓர் பிரச்சார நடவடிக்கைக்காகவே பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாகத் தோன்றுகின்றது. அரசாங்கம், தான் நியாயபூர்வமாகவே இப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென ஆவலாய் இருப்பது போலவும், புலிகளோ அதற்குமேலாக தாங்கள் சமாதானத்திற்காகவே இருப்பது போலவுமே காட்டிக் கொள்ள முற்படுகின்றனர்.

ஆனால் அடிப்படைப் பிரச்சினைகளை கையாள்வதில் புலிகளும், அரசினரும் எவ்வளவு தூரம் அக்கறையாக உள்ளார்கள் என்பது இன்றும் கேள்விக்குரியாகவே உள்ளது. வீண் கால விரயங்களும் இழுபறிகளும்தான் கண்முன்னால் தெரிகின்றன.

எனவே இருபகுதியினருக்கும் பேச்சுவார்த்தையில் நம்பிக்கை இருக்குமாயின், எவ்வாறு இருவரும் போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டார்களோ அதுபோலவே புதிய உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்வதில்லை..... இராணுவ தளபாடங்களை இறக்குமதி செய்வதில்லை..... இராணுவ நடவடிக்கைகளுக்கான தயாரிப்புக்களைச் செய்தில்லை எனவும் ஒப்பந்தங்களை ஏற்படுத்தி இருக்க முடியும்.

ஆனால் இருபகுதியினரின் நடவடிக்கைகளையும் பார்க்கும்போது இன்னொரு யுத்தத்திற்கான தயாரிப்பு வேலைகளைச் செய்து வருவதாகவேதோன்றுகின்றது.போர்தவிர்ப்பு ஒப்பந்தத்தையும் பேச்சுவார்த்தையையும் இதற்கான ஓர் இடைக்கால அவகாசமாகவே இவர்கள் கருதுகின் றார்கள் போல் உள்ளது.

ஆகவே அரசாங்கம் இனியும் காலதாமதப் படுத்தாமல் இப்பிரச்சினைக்கான தீர்வொன்றை முன்வைக்க வேண்டும். தமிழ் மக்கள் இந்த நாட்டில் கௌரவமாகவும், சுயாட்சியுடனும் வாழக்கூடிய வகையில் ஓர் தீர்வை முன்வைப்பதன் மூலம் மாத்திரமே இன்று பேச்சுவார்த்தையில்தோன்றியிருக்கக்கூடியதேக்க நிலையையும் இழுபறியையும் அகற்ற முடியும்.

நியாயபூர்வமான தீர்வாக இருக்கும் பட்சத்தில் புலிகளும் அதனை ஏற்றுக் கொள்வார்கள் இல்லையேல் உள்நாட்டில் வெளிநாட்டில் இருக்கக்கூடிய முழுத் தமிழ் மக்களுமே புலிகளின் மேல் நிர்ப்பந்தத்தைக் கொண்டுவருவார்கள். அதுமாத்திரமல்லாமல் சர்வதேச சமூகமும் கூட இவர்கள்மேல் நிர்ப்பந்தங்களை உருவாக்கும்.

எனவே அரசு வட-கிழக்குபிரச்சினையை தீர்ப்பதற்கான ஆலோசனைகளை உடன் மக்கள்முன் வைக்க வேண்டும் என்பதே இன்றைய காலத்தின் தேவையாகும்.

# குறுக்கெழுத்துப் போட்டி-11

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | ■ | 5 | | 6 | 7 |
| 8 | | | ■ | 9 | 10 | | ■ | 11 | |
| 12 | | ■ | 13 | | | ■ | 14 | | |
| | ■ | 15 | | | ■ | 16 | | ■ | |
| 17 | 18 | | | | ■ | 19 | | | |
| ■ | 20 | | | | 21 | | | ■ | ■ |
| 22 | | ■ | ■ | 23 | | ■ | 24 | 25 | 26 |
| 27 | | 28 | 29 | | ■ | 30 | | | |
| | ■ | 31 | | | ■ | | ■ | 32 | |
| 33 | | | ■ | 34 | | | | ■ | ■ |

## இடமிருந்து வலம்

1. எங்கள் நாட்டின் இன்றைய பேச்சும் மூச்சுமாக இருப்பது.
5. பாரிமகளிர் இருவரில் ஒருவர்.
8. கோழிக்குப் புது உயிராகவும், படிக்கையில் பலருக்கு மதிப்பெண்ணாகவும் இருப்பது.
9. ஆயர்பாடிக் கண்ணனுக்கு அன்னை.
11. 'மி' சேர்த்தால் தலையில் வைப்பது. (தலைகீழ்)
12. கணிகை.
13. கருத்தரிக்க முடியாத உடற்குறைபாடு உடையவள்.
14. பிரபாகரன், சிறுவயது காலத்தில் உயிர்களைக் கொல்லப் பழகிய ஆயுதம் இது என்கிறார் ஒரு வரலாற்றாசிரியர்.
15. பெண்களிடம் கேட்கக் கூடாதது. (தலைகீழ்)
16. பெரும்பாலும் முகத்தில் போடுவது.
17. நெற்றிக்குரிய மங்கலப் பொருள். (தலைகீழ்)
19. சிங்கம்.
20. ----அமைதி; பின்னும் அமைதி. (தலைகீழ்)
22. ஆடுற மாட்டை ஆடி பாடுற மாட்டை பாடி.
23. ஓம் சரவண--.
24. எண்ணைப் பகுக்கிறபோது இறுதி நிலையில் இருப்பது.
27. குறிப்பிட்ட நிகழ்வு.
30. எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும். இது இல்லாத நிலை வேண்டும்
31. சிறு குன்று
32. வே.க வைத்தல. (தலைகீழ)
33. விள[illegible]காத மர்மம்.
34. சிறுதொல்லை தரும் விளைய[illegible]டுத் தனம்.

## மேலிருந்து கீழ்

1. மக்கள் தொகுதி.
2. பெ[illegible]ம பொருந்திய உயர்நிலை.
3. முகத்தில் தாடி இருக்கும் பகுதி.
4. வாரமஞ்சரி ஒன்றில் பெண்கள் பகுதிக்குத் தலைப்பு. (தலைகீழ்)
5. நகத்தோடும் எலும்போடும் ஒட்டி இருப்பது.
6. நாய் அல்லது பூனையின் ஆண். கடைசி எழுத்தில்லாமல்.
7. கூரையேறிக் கோழி பிடியாதவன் வானமேறி இங்கெப்படிப் போவது?
10. இணை.
13. தன்வசம் இழத்தல்.
14. மன்மதன் கையிலுள்ள ஆயுதம்.
15. இந்த இடத்தில் மூட்டை வைத்துச் சுமக்கலாம்; மற்றவர்க்குச் சொறிந்து விடலாம். இங்கு குழம்பியுள்ளது.
19. பசுமையான.
18. ரசிகர்கள் சேர்ந்து அமைப்பது.
21. சக்தி. (தலைகீழ்)
22. கைப்பு.
25. எந்தையும் தாயும் மகிழ்ந்து --- இருந்தது இந்நாடே.
26. எல்லா மக்களும் விரும்பும் சூழ்நிலை. (தலைகீழ்)
28. கூறு.
29. கடையெழுத்தில்லாத வருகை.
30. தமிழ்மக்கள் ஒரு தேசிய ---.

## கு.எ.போட்டி-10 விடைகள்

| இடமிருந்து வலம்: | மேலிருந்து கீழ்: |
|---|---|
| 1. குமரி அனந்தன் | 1. கும்பகர்ணன் |
| 7. ரம்பம் | 2. அரசியல் |
| 8. (அத்)தான் | 3. (வ)னம் |
| 9. பயிற்சி | 4. கந்தரகோளம் |
| 11. கோ(ப)ம் | 5. பரதம் |
| 12. மன | 6. தென்னம்பாளை |
| 13. பயங்கரவாதம் | 8. தாமதமாக |
| 15. சில் | 10. சிற்பம் |
| 16. பாமாலை | 14. வாலைக்குமரி |
| 17. பணம் | 18. பதிவிரதை |
| 19. தவக்களை | 20. வங்கி |
| 21. தின் | 22. கும்பல் |
| 22. குரங்கு | 24. சக |
| 23. விசனம் | 25. விதான(ம்) |
| 26. மகிமை | 27. இளமை |
| 28. விரகதாபம் | 28. பாவி |
| 30. களரி 32. பாதை | 29. வம்(பு) |
| 33. வில்வம் 34. இலை | 31. கலை |

சரியான விடை எழுதி ரூபா 100 பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி

க.ஆரூரன்,
களுபோவில வீதி,
தெகிவளை.

பாராட்டுப் பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து பேர்கள் வருமாறு:

1. அ.அ. நளீஃபா,
   பழைய வீதி, காத்தான்குடி.
2. எம்.எஸ். ஜெயவீரரெட்ணம்,
   சிறீலங்கா ரெலிகொம், மட்டக்களப்பு.
3. திருமதி. வ. யோகேஸ்வரி,
   வவுனியா.
4. கே. ஸ்ரனிஸ்லோஸ்,
   பஸ் நிலையம், மன்னார்.
5. திருமதி. ப. கலாராணி,
   தலவாக்கலை.

விடைகளை மட்டும் தனியாக ஒரு தபாலட்டையில் எழுதி எதிர்வரும் 25ந் திகதிக்கு முன் அனுப்பிவையுங்கள்.

புதிய கண்ணோட்டம்,
த.பெ.இல: 442,
கொழும்பு.

## இந்திய சஞ்சிகை கிழிக்கப்பட்டது

இந்தியா டுடே என்ற தமிழ் சஞ்சிகையின் பெப்ரவரி 28ம் திகதிய பதிப்பில் வெளியான கட்டுரை ஒன்று, இலங்கை அரசாங்கத்தின் உத்தரவின் பெயரால் கிழிக்கப்பட்ட பின்னரே சஞ்சிகை விநியோகிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக இந்தியாவில் நடைபெற்றுவரும் வழக்கு விசாரணையை அக்கட்டுரை விபரிக்கின்றது. அக்கொலைக்கு புலிகள்தான் பொறுப்பானவர்கள் என்பது நிரூபிக்கப்பட்டால், அவர்களைக் கைது செய்வது தொடர்பாக இந்திய இலங்கைக்கு இடையில் ஏற்படக்கூடிய கருத்துக்கள், சில சமயம் புலிகளுக்கு எரிச்சலூட்டலாம் எனவும் கருதப்படுகின்றது. இது தொடர்பாக வெளியிடப்பட்ட கட்டுரையே இந்தியா டுடேயில் இருந்து கிழிக்கப்பட்டது. இக்கட்டுரை அரசு-புலிகளுக்கிடையிலான பேச்சுவார்த்தைக்கு குந்தகமாக இருக்கலாம் என்பதால் இப்பக்கங்கள் கிழிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF

22, வெளிவட்ட வீதி, வவுனியா சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களால் இரத்தனப்பிட்டிய CRC அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்